பான் நெ 13.　　REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 25—4—54 | இதழ் 43

"பூந்தோட்டத்தில், ★ புலிக் கூட்டம்!"

★

[அண்ணல்]

உற்பத்தியைப் பெருக்குங்கள்!—
பாது முழக்கமிடுகிறார், டில்லி மகி
ர், பண்டிதர்.

இதோ, ஒரு குரல், ஒலிக்கிறது—
உற்பத்தியைப் பெருக்காதீர்கள்!
னர்த்தம் விளையும்!!"

குறுமதிகொண்டோரல்ல, கூவு
து. கோணல் மதி படைத்த
ாகிஸ்தானிலிருந்தல்ல, குரல்
ிளம்புவது.

பண்டிதரின் அரசு தர்பாருக்கு
ட்பட்டுக்கிடக்கும் ஆந்திரத்திலி
ருந்து! அரசு புரியும் கட்சியின்மீது
சையும் மோகமும் வைத்திருப்
பாரிடமிருந்து!! விபரீதம் விளை
மாம்! — உற்பத்தி அதிகரித்தால்.
ழுது வாழும் விவசாயிகளுக்கு
வ்வண்ணம், எச்சரிக்கை விடுத்
ருக்கின்றனர்.

வேண்டுகோள் ஒன்றும், விடுத்
ள்ளனர்—விவசாயிகளுக்கல்ல!—
ர்க்காருக்கு.

எந்தச் சர்க்கார், 'உற்பத்தியைப்
பெருக்கவேண்டுமென்' உரத்து கூவு
றதோ அந்தச் சர்க்காருக்கு அவர்
ள் விடுத்திருக்கும் வேண்டுகோள்
அரசாங்கமே! எங்கள் எச்சரிக்
கையை இந்த விவசாயிகள் பொருட்

படுத்தாமலிருந்தாலும் இருக்கலாம். ஆகவே, சட்டமொன்றுசெய்து அதிக உற்பத்தி ஏற்படாமல் தடைசெய்யுங்கள்" என்பதாக.

உற்பத்தியைப் பெருக்கக்கூடாதாம்! ஆபத்தாம்! அதற்குச் சர்க்கார் தடைவிதிக்க வேண்டுமாம்!—விசித்திரமான செய்தி; இதில் கலந்திருக்கும் வேதனை பெரியது.

அமெரிக்கச் சீமான்கள் அதிகக் கோதுமை உற்பத்தியானால், அதனை அமேஸான் நதியில் கொட்டுவார்களாம்! விலை இறங்கி வியாபாரம் கெட்டு, லாபம் குறைந்திடுமோ எனும் கவலையால்.

அதிக உற்பத்தி கூடாதெனக் கூறும் 'ஆந்திரத்தார்' சீமான்களல்ல; சிறு வியாபாரிகள். அவர்கள், இவ்வண்ணம், குண்டூரிலிருந்து வெளியிட்டிருக்கின்றனர்.

குண்டூர் கிடங்குகளில் ஏராளமான புகையிலை தேங்கிக்கிடக்கின்றதாம்! சுமார் இரண்டுகோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்!! என்ன, செய்வார்கள், வியாபாரிகள்? பொருள் விற்றால், அந்தப் பணத்தைக்கொண்டு, மேலும் புகையிலை வாங்கிவியாபாரம் செய்ய

முடியும்! விற்கவேண்டிய புகையிலையோ தேங்கிக்கிடக்கிறது. வாங்குவாரில்லை! வருத்தம், கரைபுரள்கிறது! சோககீதம் பாடுகின்றனர்!!

லால்சந்துதாதாவாகவோ, டாடாவாகவோ, இருந்தால் சரக்கு எத்தனை நாட்களுக்கு இருந்தால் என்ன!—என்றிருக்கலாம். இவர்கள், சாதாரண வியாபாரிகள்! சங்கடப்படுகிறார்கள். அதனால், பண்டிதரின் குரலுக்கு எதிரொலி, தருகிறார்கள். வேண்டுமென்றல்ல; நிலைமை அப்படி.

*

ஊர் கெடுப்பவளை உயிரோவியமெனக் கருதி, 'உயிரே! உத்தமியே! பத்தினியே!' என்று அனுதினமும்பாடி ஆராதிப்பவனைக் காண்போர், ஆயாசப்படுவர் — பரிதாபத்தால். வஞ்சகியின் வாய் ஜாலம்! வனிதையின் வர்ணங்கள்!! நம்பத்தகாதவைமட்டுமல்ல, பயனற்றவை. இந்தப் பாலப்பாட்டத்தை எத்தனை தடவை எடுத்துரைத்தாலும்—ஏன்! இடித்துரைத்தாலும் ஏற்க மறுப்போர் இருக்கிறார்கள், இங்கு இன்றும்! ஏனம்! புள்ளி

விபரம்! இந்த முறைகளில் எதைக் கையாண்டாலும் மோகபோதையில் லயித்துவிட்டோரை அறிவுப் பாதைக்கு அழைப்பதென்பது எளிதாயில்லை. 'ஏட்டுச் சுரையப்பா அது! எண்ணியேங்காதே' என்றால், 'பாட்டு மொழிப் பைங்கிளியைப் பரிகாசம் செய்யாதேடா, பாவி' என்று பதைக்கின்றனர். பாயவும் செய்கின்றனர். அரசியல் வேசமும் பூஜா மோகமும் குடிகொண்ட நமது தேசிய நண்பர்களின் அகத்திரையை விலக்க ஆயிரமாயிரம் சொல்லி வருகிறோம். பயன் என்ன? பாய்கிறார்கள்! ஏசுகிறார்கள்!! அவர்களின் திருப்பார்வைக்குத்தான், மேற்படி செய்தி.

*

ஆந்திரத்தில் 2 கோடி ரூபாய் சரக்கு தேங்கிக்கிடப்பதால், வியாபாரிகள் வேதனைக்குரல் எழுப்புகிறார்கள். விவசாயிகள் புகையிலையை உற்பத்தி செய்யவேண்டாமெனக் கூறுகிறார்கள். இந்தக் குரலைக் கேட்டு, விதைத்து அறுப்போன், விவசாயத்திலீடுபடாமலிருப்பதென்றால், என்ன ஆகும்? அவன் வீட்டு அடுப்புத் தூங்கும்! குழந்தைகளின் கூக்குரலும் மனைவியின் சோகமும் அதிகமாகும்!! பூமியில் உழைத்து அந்தப் பூமியன்னை வழங்கும் பொருளைக்கொண்டு காலத்தை ஓட்டவேண்டியவன் வாழ்வில், கலக்கமும் வேதனையும் அதிகமாகும். இப்போதே, அது காட்சி தருகிறது! அவன் பாடுபட்டு உழைத்த பொருள்கள், தேங்கிக் கிடக்கின்றன. கொள்வாரில்லை! இந்நிலையில், அவன் அதிகமாக உற்பத்தி செய்துதான் ஆகப்போவதென்ன! ஆகவே, குண்டூர் வியாபாரிகள், அவர்களை எச்சரிக்கிறார்கள்—எங்கே, உற்பத்தி செய்துவிட்டுப் பிறகு திண்டாடப்போகிறார்களோ, என்ற கலக்கத்தால், அரசினரையும் வேண்டுகிறார்கள்.

புகையிலை, தேங்கிக்கிடக்கிறது, ஆந்திரத்தில்! அதுவும் எத்தகைய புகையிலை? லண்டன் மாநகரிலும், பாரீஸ் பட்டணத்திலும், பெர்லினிலும் இன்னும் பல ஐரோப்பிய நாடுகளிலுமிருக்கிற மக்கள், உல்லாசத்துக்கு உபயோகிக்கும் புகையிலை—உயர்தர 'சிகரெட்' புகையிலை. அது சீண்டுவாரற்று, கிடக்கிறது, இங்கே! ஆனால், அந்நாடுகளிலிருப்போரோ, இந்தப் புகையிலையைத் தந்தால் வாங்கிக் கொள்ளக்காத்துக் கிடக்கிறார்கள்!! இங்கிலாந்து, முன்பெல்லாம், குண்டூர் புகையிலையைக் கொண்டுபோயிற்றும், கோடிக்கணக்கில். இப்போது, இல்லை! பிடிக்காததால் அல்ல, டில்லிபீடம் அனுமதிக்காததால்.

“வானம் பொழியுது! பூமி விளையுது!! உனக்கென்னடா உரிமை, வெள்ளைக்காரா?” என்றானாம் தென்னாட்டு வீரன் கட்டபொம்மன். அதைப்போல, ஆந்திர மண்ணிலே விளைகிறது, புகையிலை. ஏழை விவசாயிகள் உழைக்கிறார்கள், அதற்காக. ஆனால், அந்தப் புகையிலையை வைத்து அரசியல் லாபம் சம்பாதிக்க விரும்புகிறது, டில்லி.

விளைவது, குண்டூரில்! தேவைப்படுவது லண்டனில்! அண்ணாராவுக்கு அலெக்சாண்டர் கடிதம் எழுத, அண்ணாராவ் உடனே சரக்கை எடுத்து அனுப்பவேண்டியதுதானே?—என்று கேட்கலாம். ஆனால், அதுமுடியாது. குண்டூர் வியாபாரி அண்ணாராவ் தான் வைத்திருக்கும் புகையிலையை நேராக லண்டனுக்கு அனுப்பிடமுடியாது! டில்லி வைத்திருக்கும், 'மத்திய வியாபார போர்டு' மூலமே, இந்த வியாபாரத்தைச் செய்யமுடியும்! அந்த மத்திய புகையிலைப் போர்டோ — மார்வாடிகள் கூடம்!! குண்டூர் சரக்கைப்பற்றி, கவலைப்படாது. விளைத்தவன் அழுகிறான்! அவன் கண்ணீரில் கானம் பாடுகிறது, டில்லி!!

இதனையே, இங்குள்ள தேசிய மோகிகளுக்குச் சுட்டிக்காட்ட விரும்பினோம். ஆந்திரம் அவதியுறுகிறது, இப்படி! ஆனால், அவதியைச் சிருஷ்டிக்கும் வகையில் அதிகாரத்தை காட்டும் மத்யபீடம் அதிகாரக் கோலை மட்டும் விடமறுக்கிறது.

இத்தகைய மத்யபீடம் எதற்கு? கனிகுலுங்கும் தோட்டத்தைப் புலியின் வசம்விட்டுவிட்டு, 'காயைப் பறிக்க முடியவில்லை! கனியைப்பறிக்கப் பயமாயிருக்கிறது!' என்று கதறுவது, விவேகிகளின், பண்பாமோ? விளைகிறது, புகையிலை, இங்கே! அதுவும் விலைபோகக்கூடிய சரக்கு!!

அதனை, இங்கேயே ஒரு ஆலை கட்டி, 'சிகரெட்' தயாரிக்கலாம். அத்தகைய சிறப்புள்ள சரக்கு! ஆந்திரத்தின் முன்னேற்றத்தில் அக்கறையிருந்திருந்தால், ஆலை அமைத்திருக்கவேண்டும்—நம் பொருளை அன்னிய நாட்டுக்கேன் அனுப்ப வேண்டும்—புகையிலையை வாங்கிச் செல்லும் அவர்கள் சிகரெட்டாகத் தானே செய்து தள்ளுகிறார்கள்—அதே சிகரெட்டை நீங்களே உற்பத்தி செய்யுங்கள்—இதோ பணம்! ஆலையமைத்தால், பலருக்கு வேலையும் கிடைக்கும் பயனும் பெறலாம், என்று தெரிவித்து அதற்கான ஊக்கம் அளிக்கவேண்டும்.

கனித் தோட்டத்தில் புகுந்த புலிக்கு, அந்த எண்ணம் கடுகளவும் இல்லை.

அந்த ஆசையில்லையென்றால், உற்பத்தியான சரக்கைத் தேங்கவிடாமல், வெளிநாடுகளுக்காவது அனுப்பவேண்டும்— அந்த முயற்சியும் இல்லை.

ஆனால், 'உற்பத்தி பெருகவேண்டும்! உற்பத்தி பெருகவேண்டும்!! என்ற முழக்கத்துக்கு மட்டும், குறைவில்லை.

*

“அகோ, வாரும் பிள்ளாய் மந்திரியாரே!,” என்று ராஜா அழைக்க, “ஆறுகால பூஜையும் சரிவர நடக்கிறது மகாராஜா!,” என்று சொல்லக்கூடிய ராஜாமந்திரிகள், காலமல்ல, நாம் இருப்பது. பாரதியார் பாடியது போல, 'கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம், காவிரியின் வெற்றிலைக்கு மாறுகொள்ளக்கூடிய' காலம்! அமெரிக்காவில் குவிந்த பொருள்கள் ஆஸ்திரேலியாவுக்கும் இந்தோசீனத்தில் குவிந்த அரிசி இந்தியாவுக்கும் ஸ்விட்ஸர்லாந்து கடிகாரம் பம்பாய்க்கும், வருகிற

வருந்துகிறோம்

காஞ்சி அறிவு வளர்ச்சிக் கழக உறுப்பினர் சி. இராசரத்தினம் அவர்களின் துணைவியார் இராசாம்பாள் அம்மாள் 14-4-54-ல் இயற்கை எய்திய செய்தி அறிந்து வருந்துகிறோம்.

காலம்! மனிதன், மரவுரியையும் இலைதழையையுமல்ல—நம்பிக்கொண்டிருக்கிறான், இதுபோது. பாரீஸ் நகரத்துப் பாவைகள் அணியும் உடைகளின் 'டிசைன்கள்' இரண்டோர் தினங்களிலே டில்லிநகரத்து சீமாட்டிகளின் 'பாஷனை'க் காட்சியளிக்கிறகாலம்! உலகநாடுகள் ஒவ்வொன்றும் தம்மிடம் குவியும் அதிசப்பொருள்களை, மற்றோர்நாட்டிற்கு அனுப்பி, அங்கிருந்து, தேவைப்படும் பொருள்களையோ அல்லது பணத்தையோ பெற்றுக் கொண்டிருக்கின்றன! இந்தப்போட்டிகளை, அந்தந்த அரசுகளே, பொறுப்பேற்றுச் செய்கின்றனர். அந்தப் பொறுப்புடில்லிபீடத்திடம், இல்லை. தென்னாட்டுச் சரக்குகள் என்றால், அவைகளை வெளியிடங்களுக்கும் அனுப்பி, அங்கிருந்து வரும் பணம் தென்னாட்டு வியாபாரிகளுக்கும் மக்களுக்கும் செல்லட்டும் என்ற கவலை, சிறிதேனும் இல்லை, டில்லி பீடத்துக்கு இதனையே நாம் எடுத்தெடுத்துக்கூறி வருகிறோம். அந்தக் கவலை தென்பட்டிருந்தால், குண்டூர் புகையிலை தேங்குமா! இங்கிலாந்துச் சந்தையிலே விலைபோக வேண்டிய சரக்கு இங்கே கிடக்கிறது சரக்குத்தேவையுள்ள இங்கிலாந்தோ, தனக்கு வேண்டிய புகையிலையை ரொடீஷியாவிலிருந்து வாங்கிக்கொண்டிருக்கிறது! குண்டூர் புகையிலை இருக்கவேண்டிய இடத்திலே ரொடீஷிய புகையிலை!! — இந்த விசித்திரத்தால் விளைந்த வேதனையைக் கண்டே, குண்டூரிலிருப்போர், கூக்குரலெழுப்புகிறார்கள். இங்கிலாந்து இல்லையென்றாலும், பிறநாடுகளுக்காவது, புகையிலையை அனுப்ப ஏற்பாடு செய்யலாம். அதுவும் நடக்கவில்லையாம்! எப்படி நடக்கும்? புலியின்வாய் சிக்கிய தோட்டமன்றோ!!

குண்டூர் புகையிலைக்கு இக்கதியென்றால், தென்னாட்டில் விளையும் வெங்காயத்துக்குவந்துள்ளவிபத்து குறித்து, ஒருசெய்தி வருகிறது. அண்மையிலிருக்கும் இலங்கை சர்க்கார், இனிசிவப்புவெங்காயத்தை இறக்குமதி செய்வதில்லையென்று முடிவு செய்து அறிவித்திருக்கிறார்கள். இதனால் ரூ 30லட்சம் பெறுமானமுள்ள, சரக்கு இங்கே, தேங்குமாம் இலங்கைத்தீவின் சர்க்காருக்கும் தமக்குமுள்ள அன்யோன்யத்தைக் காட்டிக் கொள்ளும் முயற்சியில் ஆபாசம் அரசோச்சுமளவுக்கு, செல்லுகிறது டில்லி. அண்மையில் கொத்தலவலா, தமது அன்பை, சித்திரலேகாவை ஆலிங்கனம் செய்து தெரிவித்துக் கொண்டார்! அம்மையரும் ஆனந்த நடனம் ஆடினார்!! ஆனால், நடவடிக்கை இப்படி வருகிறது. இலங்கை சர்க்காரின் உத்தரவைப் பார்க்கும் பொழுது இன்னும் வேதனையாயிருக்கிறது. பம்பாயிலிருந்து! வங்காளத்திலிருந்து!!— கிடைக்கும்வெங்காயங்கள், இறக்குமதிசெய்யப்படலாம். ஆனால், தமிழகத்து வெங்காயத்துக்கு தடையாம்! ஏன்? இங்கே விளையும்பொருளுக்கு இப்படி 'வரவேற்பு' கிடைத்தால், என்ன செய்வர், ஏழைகள்! தொழில் எங்ஙனம் வளரும்? துன்பம்எப்படி நீங்கும்!

*

இங்கே விளையும்பொருள்கள்மீது வடவர் அசிரத்தை காட்டுவதுமட்டுமல்ல, தமது ஆதிக்கத்தால் இங்குள்ள சில தொழில்களையும் நசுக்க முற்பட்டு விடுகின்றனர். திருவாங்கூரின் முக்கிய தொழில்கள். கயிறு பின்னுதலும், முந்திரிக் கொட்டை உடைத்தலும். கயிறு பின்னும் தொழில் மத்திய பீடத்தின் அசிரத்தையால் அடைந்து வரும் அல்லல்களை, அறிவோம். இப்போது முந்திரிக் கொட்டைத் தொழில், தாங்கொணாத சங்கடத்தை அனுபவிப்பதாகக் குமுறல்கிளம்பியிருக்கிறது! உலகத்திலேயே மிகவும் அதிகமாக முந்திரி ஏற்றுமதி செய்யும் பிரதேசம், திருவாங்கூராகும். அங்கு இத்தொழிலில்சுமார் 80,000 மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களில் பாதிப்பேருக்கு இப்போது, வேலையில்லையாம்! மொத்தமுள்ள 135 ஆலைகளில் 75 ஆலைகள் மூடப்பட்டு விட்டதால், ஏராளமான தொழிலாளர்கள் அவதியுறுகின்றனர். இவர்களில் பெரும்பாலோர், பெண்களாகும்! எல்லோரும், இன்று, வாழமுடியாத நிலைமையில், மிகவும் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். முன்பெல்லாம்தேவையான முந்திரிகளை ஆபிரிகாவிலிருந்து வரவழைத்து அவைகளைப்பதப்படுத்தி அமெரிக்காவுக்கு அனுப்பிக்கொண்டிருந்தனர். அதனால் வயிறு வளர்த்துவந்த 40000 மக்கள், இன்று வீதிகளிலே அலைகிறார்கள். இதற்குக் காரணம், இந்தத் தொழிலில் போட்டியிட பம்பாய் பண மூட்டைகள், குவிகின்றனவாம்! அவர்களுடன், போட்டியிட, முடியுமா!!— அதனால் நெருக்கடி அதிகமாகிறது, நிலைமை மோசமாகிறது, நிலைமை மோசமாகிறது என. அவலக் குரல் கிளம்புகிறது.

*

இந்தக் குரலொலிகள், முன்போலன்றி, இப்போது அரசு மன்றங்களிலும், கேட்கிறது—அடிக்கடி.

“தமிழ்நாடு, தேசத்தின் ஒரு மூலையில் ஒதுங்கிக் கிடப்பதாலும் அங்கு அதிகக் கூச்சல் எழுப்பப்படாததாலும்தான், எந்தத் திட்டத்திலும் கவனம் செலுத்தப்படாமல் ஒதுக்கப்படுகிறது. நல்ல திட்டங்களை நிறைவேற்ற, நாங்கள் பிச்சை கேட்கவில்லை. கடன்கொடுக்கக்கூடாதா?”

என்று பி நடேசன், டில்லி சட்டசபையில் கடந்த 7-ந்தேதி பேசியிருக்கிறார். அவர் ஒரு, தி. மு. க. அல்ல! காங்கிரஸ்காரர்!!

“தென்னிந்தியாவிலிருந்து வட இந்தியாவுக்கு சுமார் ரூ. 50-லட்சம் மதிப்புள்ள பொருள்கள்தான் அனுப்பப்படுகின்றன, ஆண்டுக்கு. ஆனால் அங்கிருந்து இங்குவருவதோ 150 லட்ச ரூபாய் மதிப்புள்ள சரக்குகள். தெற்கேயிருந்து போகும் ரயில்கள் காலியாகவே போகின்றன! வடக்கிருந்து வரும் ரயில்களோ மூட்டையாக பொருள்களை இறக்கியவண்ணமாகவே உள்ளன” என்று சென்னை மேல்சபையில் பேசிய டாக்டர் ஜான், கூறியுள்ளார். அவர், பிரிவினை விரும்புபவரல்ல!

“யூனியன் சர்க்கார் இந்த மாநிலத்தை எப்படி நடத்துகிறது என்

பதை என்னுடைய ஆட்சிக்காலத்திலே நான் நன்கு அனுபவித்திருக்கிறேன். மத்திய சர்க்கார் காட்டிய போக்கின் காரணமாக, வேறு கதியற்ற நிலையில் நான் பல முறை ஆத்திரம் கொண்டிருக்கிறேன்.''

சென்னை மேல் சபையில் மார்ச் 10-ம்தேதி இவ்வண்ணம் கூறியிருக்கிறார், முன்னாள் முதலமைச்சர், ஓமந்தூர் ராமசாமி. அவருக்கு 'திராவிடநாடு' என்பது, கசப்பான விஷயம்!

''தொழில் துறையில் ஏற்கனவே வளம் பெற்றுள்ள பகுதிகளை மேலும் வளப்படுத்துவதையே யூனியன் சர்க்கார் தனது தொழில் முன்னேற்றக் கொள்கையாகக் கொண்டிருப்பதுகண்டு வருந்துகிறேன். புதிய புதிய தொழில்களை நிர்மாணிக்க பம்பாய்க்கோ அல்லது கல்கத்தாவிற்கோ அடிக்கடி அனுமதியளிக்கப்படுகிறது. இந்தியா முழுமையும் 3760-லட்சம் மக்கள் உள்ளனர். இதில் 600-லட்சம் மக்கள் தென்னிந்தியாவில் உள்ளனர். ஆனால், இவர்களுக்கான ஆலைகள், இல்லை.''

இவ்வண்ணம் கூறியிருக்கிறார் ஏப், 10-ந்தேதி, அனந்தராமகிருஷ்ணன் என்பவர். தென்னிந்திய வியாபார சங்கத் தலைவர், அவர்—நம்மவரல்ல! அவர்களால் பாராட்டப்படுபவர்!!

தென்னாட்டை வடநாடு புறக்கணிக்கப்படுவதைப்பற்றிப் பேசாதவர் இல்லை. காங்கிரஸ் உறுப்பினர்கள்மட்டுமின்றி, சில வேளைகளில், அமைச்சர்களும் பேசுகின்றனர். அண்மையில் குடந்தைக்கு வந்த டில்லிபீடத்தின் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியிருக்கிறார், ''வடநாடு—தென்னாடு என்று பேசுவது, சிலசமயங்களில் பொருத்தம் என்றே எனக்குத் தோன்றுகிறது. இல்லையெனில் பலருக்கு நம்மைப் பற்றி விழிப்பேற்படாது'' என்பதாக.

இவர்கள்மட்டுமல்ல, இதோ, இன்னொருவர், பேசியிருக்கிறார், சென்னை சட்டசபையில். இலங்கை சேனநாயகாவிலிருந்து டில்லி பண்டிதர்வரை அவருடைய மாளிகையில் மனமகிழ்ச்சி காண்பார்கள்! 'எக்கட்சியும் என் கட்சி' என்று கூறியவண்ணம் இருப்பவர்! சென்னை அரசியலின் 'தலைவிதி'யை நிர்ணயிக்குமளவுக்கு, வளர்ந்திருக்கும் தனி நபர்—அடையாறு சீமான்—'ராஜா' முத்தையா:— ''தென்னிந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறது. இங்கு, தொழில்கள் இல்லாததுதான் அதற்குக் காரணம். இங்கு தொழில் வளர்ச்சிக்கு விரைவில் அமையவிருக்கும் கைத்தொழில் நிதி உதவி கார்ப்பரேஷனுக்கான பூர்வாங்கக் கமிட்டியில்கூட, ஏ. ராமசாமிமுதலியார் ஒருவர் மட்டும்தான் தென்னிந்தியர்; இது, போதாது.'' என்று பேசியிருக்கிறார்.

பி. நடேசன், அனந்தராமகிருஷ்ணன், அடையாறு முத்தையா ஆகியோர் இவ்வண்ணம் நமது குரல்களை எதிரொலிப்பது கேட்டு, 'எடு மாலையை! போடு அவர்களுக்கு!!' என்று ஆனந்தப்பண் பாடவில்லை, நாம். இவ்வண்ணம் அவர்கள் கூறுவதில், அர்த்தங்கள் ஆயிரம்பொதிந்திருக்கலாம்—ஆனால், வெளிப்படும் உண்மையைக் கூர்ந்து கவனிக்க வேண்டுகிறோம்.

''ஆலைகள் பத்தைத்துவங்கி அவ்வளவையும் முத்தையாவிடம் ஒப்படையுங்கள். அதற்காகவே திராவிடநாடுகேட்கிறோம்!!' என்பதல்ல, கோரிக்கை. பேதையும், அறிவான் இன்றிருக்கும் சமுதாய அமைப்பினையே மாற்றியமைத்திடும் நமது நோக்கம், ஆலையரசர்கள் பலரிடம் சிக்கியிருக்கும் தொழில்களையெல்லாம் எதிர்காலத்தில் மக்கள் அரசுக்குக்கீழ் கொண்டுவரவேண்டுமென்பதுதான், என்ற உண்மையை. எனினும் இன்றுள்ள நிலை! வாட்டிடும் வடவரின் கொட்டம் — அவர்கள் தென்னகத்தை 'மார்க்கெட்' ஆக்கிட வைத்திருக்கும் திட்டம் — முதலியவைகளையே, விளக்கிட விரும்புகிறோம்.

ஆலை, இங்கே, இல்லை! — இந்த உண்மையை எவரும் மறைப்பதற்கில்லை.

*

ஆந்திரம் — கேரளம் — தமிழகம்—கன்னடம், இந்தப் பிரதேசங்களில் வடவரின் கண் விழுவதில்லை. குண்டூர் புகையிலை தேங்கிக் கிடக்கிறது. கேரளத்து முந்திரி ஆலைகள் மூடப்படுகின்றன. கன்னடத்திலிருந்தும் இதோ ஒரு குரல் கேட்கிறது. மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா, மார்ச் 11ந் தேதி சட்டசபையில் கூறினார்:—''மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் பொதுவான விஷயமாக கோலார் தங்கச் சுரங்கம் இருந்தபோதிலும் கூட, இத்துறையில் மாநிலசர்க்கார் எடுக்க நினைக்கும் நடவடிக்கைகளுக்கு முன்கூட்டியே மத்திய சர்க்காரின் ஒப்புதல் பெறவேண்டியது கட்டாயமாகிறது. மத்ய சர்க்காரை நினைவுறுத்திக் கொண்டுதானிருக்கிறேன். ஆனால், இதுவரையில், எவ்வித சிறு பதிலும் பெற்றேனில்லை''

தற்போது தனிப்பட்டோரின் வசமிருக்கும் தங்கச் சுரங்கத்திலிருந்து, முன்பு 1 கோடி ரூபாய்

தனி அரசு

மாதம் மூன்று முறையாக
மேமாதமுதல் 1, 10, 20 தேதிகளில்
வெளிவரும்.

ஆசிரியர் ஏ. வி. பி ஆசைத்தம்பி

அரசியல் பொருளாதாரம் சமுதாயம் பற்றிய புதுப்புது அம்சங்களுடன் மலருகிறது.

கட்டணம் (தபாலில்)

ஆண்டுக்கு ரூ. 4—8—0
ஆறு மாதம் ரூ 2—4—0
மூன்று மாதம் ரூ. 1—4—0

தனிப்பிரதி 2-அணா

போதிய முன்பணம் அனுப்புவோருக்கு ஏஜன்சி தரப்படும்.

விவரங்களுக்கு:

தனி அரசு
விருதுநகர்.

புதிய தொடர் கதை!

ப. வண்ணன்

தீட்டிய

"அமைந்த பாதை"

முற்றிலும் புதிய பிரச்னை விளக்கப்பட்டிருக்கிறது

இனிமையும் பயனும் தரும் ஓவியம்

வருமானம் கிடைத்ததாம். இப்போது நஷ்டம் ஏற்படுவதாகக் காட்டி, சுரங்க முதலாளிகள் பணம் செலுத்துவதைக் குறைத்துக் கொள்ள பழக்கின்றனராம். இது விஷயத்தில் தலையிட என்னால் இயலவில்லையே!—என ஏங்குகிறார், முதலமைச்சர்.

இதுபோல, திராவிடத்தின் எப்பகுதிகளை நோக்கினும், ஏக்கமும் தூக்கமும் இல்லாமலில்லை.

தென்னாட்டில், ஏக்கம் தூக்கம் அரசோச்சும் நேரத்தில், வடநாட்டின் நிலையை எண்ணி ஒப்பிடும் போதுதான், இதயக்குமுறல் அதிகமாகிறது.

இதோ ஓர் செய்தி! நேரு பிறந்த ஐக்கிய மாகாணத்திலிருந்து,—

உள்நாட்டுப் புகையிலை ரகங்களான 'ரஸ்டிகா' 'டிபாகம்' ஆகிய இருவகைப் புகையிலைகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக ஐந்தாண்டுத்திட்ட ஏற்பாடொன்றை உ. பி. சர்க்கார் உருவாக்கியிருக்கிறது. இதற்கென அமைக்கப்பட்டிருக்கும் புகையிலைப் பண்ணைகளில் செய்யப்படும் ஆராய்ச்சி ஒரு பக்கம் நடந்துகொண்டிருக்க சிகிரெட் புகையிலை பயிரிடுவதில் விவசாயிகளை ஊக்குவிக்கவும், அவைகளை உள்ளூர் சந்தையிலேயே வெளிநாட்டு வர்த்தகர்கள் வாங்குவதற்கான சூழ்நிலையை உண்டாக்கவும், உ. பி. சர்க்கார் தீவிரமானநடவடிக்கைஎடுத்துவருகிறது.

குண்டூர் புகையிலையின் கதியைக் கொஞ்சம் நினைவுக்குக் கொண்டு வருக. கோடி ரூபாய் இருந்தால், 'சிகிரெட் ஆலை' கட்டலாம்!!

இதோ, மற்றோர் செய்தி! புது டெல்லி மார்ச் 15:—1951–52ஆம் ஆண்டில், இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்பு இலாகாவில் ரூபாய் 3,18,00,000 நஷ்டமேற்பட்டதை 'சச்சு பாக்கி' எழுதி நேர் செய்யப்பட்டுள்ளதாக, கணக்கு வழக்கு இலாகா கண்டுபிடித்துள்ளது"

விளக்கம் தேவையில்லை, டில்லியின் மகிமையைப்பற்றிக் கூற. ஒரு கோடிக்கு, இங்கே திண்டாட்டம்—அங்கே, கோடி மூன்று பாழ்!!

அதுமட்டுமா? ஆலைகள் அமைப்போருக்கு நிதி உதவி செய்வதற்காக டில்லி ஒரு கார்ப்பரேஷனை அமைத்துள்ளது. அந்தக் கார்ப்பரேஷனில், நமக்கு இடம் கிடையாது. அந்தக் கார்ப்பரேஷனின் நிலைமைப்பற்றி மார்ச் 4-ந்தேதி, டில்லி பாராளுமன்றத்தில் டாக்டர் லங்காசுந்தரம், வெளியிட்டது இது.

"கார்ப்பரேஷன்செய்துள்ளகடன் உதவித் தொகையான 15.22கோடி ரூபாயில் 6.33 கோடி ரூபாயை கார்ப்பரேஷன் நிர்வாக உறுப்பினர்களாக உள்ள 12 நபர்களில் 6 நபர்களே கடனாகப் பெற்றுக் கொண்டுள்ளனர்"

அவர்களே பெற்றனராம்! யார், அவர்கள்? அங்கே இருப்போர்! தென்றல் வீசக்கூடிய வாழ்வில் திளைத்துக்கிடக்கும் வடநாட்டினர்.

இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் வெளியிடப்பட்டபோது, கூறப்பட்ட விஷயம், இது:—

"மேற்குப்பாகிஸ்தானிலிருந்தும் கிழக்கு வங்கத்திலிருந்தும் நிலை பெயர்ப்பட்ட அகதிகளுக்கென 1954—59ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 34.43 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது"

*

தறியாளர் துயரம்! முந்திரித் தொழிலாளர் அவதி! புகையிலை உற்பத்தியாளர் குமுறல்! தமிழகத்தார் அவதி!—இத்தனையும்,இங்கே.

எனினும், இவைகளைப் பற்றி எண்ணியும் பாராத பண்டிதர், "உற்பத்தியைப் பெருக்குங்கள்" என்ற உபதேசத்தை, இங்கே தருகிறார்! உதவிகளை, அங்கே வழங்குகிறார்!!

இந்த விஷயத்தை அறிந்ததாலேயே ஆந்திரம் எரிச்சலோடு, 'வேண்டுகோள்' விடுக்கிறது—கேரளத்தார் குமுறலோடு பார்க்கின்றனர் — கன்னடத்தார் சலிப்போடு பதில் சொல்லுகின்றனர் — தமிழகத்தில், சங்கநாதம் செய்யப்படுகிறது.

இந்தநிலைமை மாற, என்னசெய்ய வேண்டும்?— ஊர் கெடுப்பவனைப் புகழ்வதா! கனித் தோட்டத்தைப் புலிக் கூட்டத்திடம் ஒப்படைப்பதா!!—சிலும்தோழர்காள்!தேசியத் தோழர்காள்!! செப்ப வேண்டாம், பதில்; சிந்தியுங்கள். எதுமார்க்கம்? எந்தமார்க்கம், சுகம்தரும்மார்க்கம்?

★

ஒரு வேண்டுகோள்

பாரதியாரின் நண்பரும், எழுத்தாளருமான பரலி சு. நெல்லியப்பர் அவர்கட்கு நிதி திரட்டிக் கொடுப்பதென தமிழ் எழுத்தாளர் சங்கம் முன்வந்திருப்பதாகவும், அப்பணிக்கு எல்லோருடைய உதவியையும் நாடுவதாகவும், 'குமுதம்' ஆசிரியர் எஸ். ஏ. பி. அண்ணாமலை அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். நிதி யனுப்புவோர், 'ஆசிரியர், குமுதம்—தபால் பெட்டி 1008, சென்னை -10' என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

போகிற போக்கில்!

[சேந்தேன்]

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாயிருப்பவராம், ஆண்டவன்! அவரையும் போட்டிக்கு இழுக்கக்கூடிய 'ஆத்மா' ஒன்று இருக்கிறது நாட்டில்! ஆண்டவனின் குடும்பத்தில், ஒவ்வொருவரும் போற்றப்படுவதுபோல, இந்த 'ஆத்மா'வின் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும், சென்றவிடமெல்லாம் சிறப்புண்டு! நான் குறிப்பிடும் 'ஆத்மா' வேறு யாருமல்ல — அண்ணாமலையாரின் 'அருந்தவப் புதல்வர்' முத்தையா செட்டியார்தான்! பாருங்கள்—ஒரு பல்கலைக் கழகத்தைக் கைவசம் வைத்துக்கொண்டு படாதபாடு படுத்துகிறார், நாட்டை.

*

அகில உலகப் புகழ் பெற்றவர்களானாலும் சரி, அரசியலில் பயன் தரக்கூடியவர்களானாலும் சரி, அவர்களால் தனக்குப்பெரும் வசதியும் பெருகிட வாய்ப்பு உண்டென்றால்—அடித்தது சான்ஸ்! அவர் உடனே அழைக்கப்பட்டு, பல்கலைக் கழகத்தின் வைஸ்சான்ஸலராக அமர்த்தப்படுவார். அமர்த்தப்பட்டவர், 'என்னால் முடியாது' என்றாலும் விடமாட்டார். 'வேலை ஒன்றும் செய்யவேண்டாம் — பெயருக்காவது இருங்கள்' என்று கேட்டுக் கொள்வார். எப்படியாவது, அந்த 'அகில உலகப் புகழ்' இருக்கவேண்டும் — அவர் போகுமிடமெல்லாம் தன்புகழ் பெருகவேண்டும். இந்த ஆசை இல்லையானால், பல்லாண்டுகள் பணியாற்றிய ரத்னசாமியும், பல்கலைக் கழகத்தின் தரத்தை உயர்த்திய மணவாளராமாநுஜமும் 'அனுப்பப்பட்டு' ஆர். கே. சண்முகத்தையும், சர். சி. பி. ஐய்யரையும் அழைக்கவேண்டிய ஆசை வந்திருக்குமா?

*

முன்போர்முறை—நான் அண்ணாமலை நகரிலிருந்தபோது, ஒரு விழாவுக்கு ஒருபெரியஆள் அழைத்து வரப்பட்டார். கல்வித் துறை அறிஞரல்ல, அவர். ஆயினும் விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தார். ஆச்சரியப்பட்டோம் நாங்கள். பிறகு, தெரிந்தது! விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்த அந்த பெரிய ஆள் (மாஸ்டர்—என ஞாபகம்) கப்பல் தொழிலில் கரை தேர்ந்தவர் என்பது. செட்டிநாட்டாருக்கும் கப்பல் தொழிலுக்கும்தான் இடையறாத் தொடர்பு உண்டே! அழைத்துவரப்பட்டதற்கு காரணம் வேண்டுமா!!

*

அன்பர் சி. பி. ராமசாமி அய்யர், இப்போது பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர். அவரை அண்ணாமலை நகரில், காண்பதே அபூர்வம்! எங்கேயாவது, ஏதாவது பேசிக்கொண்டே இருப்பார்! ஆரிய—திராவிட சர்ச்சை, வேதாந்த வியாக்யானம், அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இருக்கிற உறவு, இப்படி 'உபன்யாசங்கள்' புரிவார். அவருக்கு அமெரிக்காவில், அதிக பரிச்சயம் உண்டாம்! அந்த சச்சிவோத்தமருடைய பூர்வோத்திரம் பலருக்குத் தெரியாது. திருப்பனந்தாள் மடத்தின் ஆதரவிலிருந்த ஒருவரின் பேரன், இவர்! எப்படியோவளர்ந்து இந்தளவுக்கு வந்திருக்கிறார். 'அளவை'க் கண்டு, அண்ணாமலையார் திருமனை, அவருக்கு முடி சூட்டியது.

*

பாருங்கள்! யாருக்காவது அந்தப் பண்பு வருமா? ஒருபோது, தான் எதிர்த்த அதே நேருவை அழைத்து வந்து போற்றிப் புகழ்மாலை சூட்டி இருக்கிறார். அதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது, 'பென்' மகாநாடு. இந்த மகாநாட்டில் கலந்துகொண்டிருந்தவர்களில் முத்தையாவும் ஒருவராம்! அவர் என்ன ஒரு எழுத்தாளரா? என்று கேட்காதீர்கள். எழுத்தாளர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகவா, அந்த மாநாடு கூட்டப்பட்டது. ஏதோ, கூடவேண்டும்! பலரை பரிச்சயம் செய்துகொள்ள வேண்டும்!!

*

உளுந்தூர்ப்பேட்டையில், ஒரு 'டீ'கடை உண்டு. காரில் செல்வோர்களைப் பார், அங்கே அமர்வார்கள். அண்மையில் அந்தப் பக்கம் போக நேர்ந்த நானும், உட்கார்ந்தேன். அப்போது அங்குள்ளோர், பேசிக்கொண்டார்கள்.

"அப்பப்பா! இந்தப் பண்டித நேரு வருவதற்காக, நம்மூர் விமானத்திடலைச் சுத்தம் செய்தார்களாமே!"

"செலவு என்னண்ணே, இருக்கும்?"

"அடிக்கு ஒரு போலீஸ் வீதம் சிதம்பரம் வரையில் ஏனிப்படி போலீசைக் குவித்துவைத்திருந்தார்கள்?"

"அதற்கு என்னண்ணே, செலவிருக்கும்?"

"எல்லாம் சேர்த்தால், ஒரு அஞ்சுலட்சம் ஆகியிருக்கும் போலிருக்கு!"

* * *

'பென்' மாநாட்டில் பேசிய பண்டிதர் கூறினாராம்—"பட்டினிகிடப்பவனிடம் சென்று உயர்ந்த இலக்கியங்களைப் பற்றிப் பேசுவதால் என்னபிரயோசனம். மதம் அல்லது சன்மார்க்கம் பற்றிபேசுவதற்கு முன்பு அவனுக்கு உணவுசெலுத்த வேண்டும்" என்பதாக. அரியஉரை! சிறந்தசொல்!! ஆனால், அவர்திறந்து வைத்த மாநாட்டில், இராமாயணத்தின் சிறப்பு குறித்து. வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தனவாம். மாடிவீட்டு மனிதர்கள், இலக்கிய சர்ச்சையிலீடுபடுகிறார்கள். ஆனால் இலக்கியத்தை ரசிக்கவேண்டிய பொதுமக்கள், வாழ்வுப் பிரச்சனையிலீடுபட்டிருக்கிறார்கள்! கவலை தீர்ந்தாலன்றோ, கலையும் வாழ்வும் வளரும்? கால் வயிற்றை நிரப்ப காலணாவுக்கு அலையும் கந்தசாமி, 'கல்கி'யின் எழுத்தையும், 'நேரு'வின் கட்டுரையையுமா படிக்க முடியும்?

* * *

'கல்கி' என்றதும், ஒரு செய்தி நினைவுக்கு வருகிறது. அவருடைய [illegible]

எழுத்துக்களை நூலாக்கி, ரூ10, ரூ15 என்று விலைபோட்டு விற்பது யார் தெரியுமா? சாட்சாத் முத்தைய செட்டியாரின் கம்பெனி தானும்!

*

நேரு சிதம்பரம் வந்தபோது, ஒரு அதிசயம் நிகழ்ந்திருக்கிறது. காலைத்தூக்கி நின்றாடிடும் பாதனின் சிற்றம்பலத்துக்குச் சென்றாராம்! தில்லைத்தீட்சிதர்கள், வரவேற்றனராம்!—"இதுவரையில் யாரும் சிற்சபைக்குள், சொக்காயுடன்" அனுமதிக்கப் பட்டதில்லையாம். ஆனால், அந்தக்கட்டுப்பாடு பண்டித நேருவைக் கண்டதும், பறந்தோடியிருக்கிறது. என்ன ஆவது நடராஜனின் மகத்துவம்—என்று குன்றக்குடி, ஒரு உரிமைப்போர் துவக்கினாலும், துவக்கலாம்.

*

இந்தப் பக்தர்கள் விஷயமே, பரம இரகசியமாக இருக்கிறது. அவர்கள் ஆண்டவனை எதற்காகத் தொழுகிறார்கள் என்பது இன்னும் விளங்கவில்லை, நமக்கு! ஏனெனில் இந்த வாரம் விருத்தாசலம் நகரில் கூடிய தென்னிந்திய அர்ச்சகர்கள் மாநாட்டில், இவ்வண்ணம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்களாம் "அர்ச்சகர்களுக்கு, ஆலயங்களில் வரும் எல்லா வருவாய்களையும் ஆலய தர்மகர்த்தாக்களும், நிர்வாக அதிகாரிகளும் குறைத்து கஷ்டமுண்டாக்குகிறார்கள். ஆகவே, ஆலயங்களிலிருந்து வரும் அர்ச்சனை கட்டணத் தொகைகளை எடுத்துவிட, அரசாங்கமும், அறநிலைய இலாகா கமிஷனரும் உத்திரவு பிறப்பிக்க வேண்டுகிறோம்!!" எப்படி, பக்தி! எப்படி நமது பக்தர்கள்!!

*

இத்தகைய அர்ச்சகர்கள் வாழும் இடத்துக்கு 'தேவசபை' என்று பெயராம். சிதம்பரத்துக் கோயிலுக்குச் சென்ற பண்டிதரை, இந்தத் தேவசபை வரவேற்றதாம்! வெள்ளித் தாம்பாளமும் வரவேற்புரையும் வழங்கிற்றாம்!! கோயிலில் 'தேவர்'களுடன் கூட இருந்து வரவேற்றாராம், அறநிலைய பாதுகாப்பு மந்திரியாக நியமனம் செய்யப்பட்டிருக்கும் தோழர் பரமேஸ்வரன். அவரை, எப்படி அனுமதித்தனரோ தில்லை தீட்சிதர்கள்! தோழர் பரமேஸ்வரன், ஆதித்திராவிட வகுப்பைச் சேர்ந்தவர். 'மாடு தின்னும் புலையா, உனக்கு மார்கழித் திருநாளோ!' என்று அன்றைய நாள் வேதியர், பக்தன் நந்தனைப் பார்த்துக் கூறினாராம். இந்த நாள் தீட்சிதர்கள், பரமேஸ்வரன் பக்கம் நின்று பரமானந்தமடைகிறார்கள்!

*

தோழர் காமராசரின் மந்திரி சபையில் செய்யப்பட்ட ஒரு துணிச்சலான காரியம், தோழர் பரமேஸ்வரனை கோயில் மந்திரியாக ஆக்கியதுதான். இந்தளவுக்குத் துணிச்சல் ஏற்படக் காரணமாக இருந்தது யார்?—என்பதை நாடு அறியும். ஏதோ ஒன்று, நம் எண்ணம் நிறைவேறியிருக்கிறது.

*

ஆதித்திராவிட நண்பரை, கோயில் மந்திரியாக நியமித்தது பற்றி ஆனந்தம் ஏற்படுகிறதல்லவா? அதைவிட அருமையான செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது, காசியிலிருந்து! அங்கிருக்கும் ஆதித் திராவிட மக்களுக்கு ஒரு அற்புதமான ஆசை வந்திருக்கிறது. "கோயிலுக்குள்ளிருக்கும் சாமியை இந்த அர்ச்சகர்கள் மட்டும் தொட்டு எல்லாம் செய்கிறார்களே — நாமும் அதைப்போல் செய்தால் என்ன?" என்பதே, அது. அதனால் பலர் கூடி, கோயிலுக்குள் நுழைய முற்பட்டிருக்கிறார்கள்! கேட்ட பிரம்ம குலத்தவர், துடித்தோடி இருக்கின்றனர், சர்க்காரிடம்! மாஜிஸ்திரேட் ஆதித் திராவிடத் தோழர்களின் ஆசைக்கு தடை உத்திரவு போட்டிருக்கிறார்!!

*

தோழர் பரமேஸ்வரனுக்குப் பூரண கும்பம் அளித்து வரவேற்கும் நமது தென்னிந்திய அர்ச்சகர்கள் அவரையும், அவரது இனத்தாரையும், சாமியைத் தொட அனுமதிப்பார்களென நம்புகிறோம். அந்த முயற்சியைச் செய்து பார்க்குமாறு கோயில் மந்திரியாரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்!

★

பிரிந்தார், நண்பர்

"எஸ். கே."—இந்தப் பெயர் திரைப்பட உலகில், எல்லோருக்கும் தெரியும். தன்னுடைய வெண்கலச் சிரிப்பாலும், பழகும்தன்மையாலும் பலரதுநேசத்தையும் பாசத்தையும் பெற்றவர். ஜூபிடர்பிக்சர்ஸ்' என்ற பெயர்கேட்டால், உடனே, ஓடோடி வரும், ஒன்று சேர்ந்துவரும் அந்த 'இரட்டையர்,' உருவம். சோமசுந்தரம்—மொகையதீன், என்னும் அந்த இரட்டை நண்பர்களில் ஒருவரான நண்பர் எஸ். கே. மொகையதீன் அவர்கள், கடந்த 17—4—54 அன்றிரவு திடீரென, மாரடைப்பினால் இறந்த செய்தி மிகமிகத் திகைப்படக்கூடியதாகும். அன்றைய தினம் நீண்ட நேரம்வரை நம்மைச் சந்தித்து, உரையாடிக் கொண்டிருந்தார்! அத்தகைய நண்பர், 'போய் வருகிறேன்' என்று புறப்பட்டுச் சென்றவர் வழக்கம் போல விடைபெற்றுச் செல்கிறார், என்றே நம்பினேம்—ஆனால், போனவர் வரவில்லை! செய்தி வந்தது — இறந்ததாக! எவ்வளவு பெரிய பிரிவு இது.

திரைப்பட உலகில் குறிப்பிடத்தக்க பல படங்களை வெளிக்கொணர்ந்தவர், அவர். நமது ஏட்டின், நீண்டநாளைய வாசகர் — நமக்கு நெருங்கிய நண்பர்களில் ஒருவர். அத்தகையவரை, இவ்வளவு சீக்கிரம் இழக்க நேரிடும் என்று யாரும் எண்ணவில்லை. சென்னையில் சிங்காரமாகப் பவனி வந்த அவரது உடல், இறந்த அன்றே கோவை மாவட்டத்திலுள்ள சொந்த ஊர் கிரனூருக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டதாம்.

இறந்த நண்பருக்கு மனைவியும், மூன்று பிள்ளைகளும், ஒரு மகளும் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நமது ஆறுதலைக் கூறுகிறோம். அன்னவரின் பிரிவால் தனது கூட்டாளியை — குடும்பத்தாரில் ஒருவரை—இழந்த நண்பர் எம். சோமசுந்தரம் அவர்களுக்கும், ஜூபிடர் நெப்டியூன் தொழிலகங்களிலிருக்கும் தோழர்களுக்கும் நண்பர்களுக்கும் நமது மனமார்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரிலீடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு. நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 25—4—54 [ஞாயிறு

ஒலிக்கட்டும்! ஒலிக்கட்டும்!!

★

தஞ்சையின் முழக்கம், அடங்கவில்லை—இதோ! என்றழைக்கிறது, சேலம்.

பாட்டாளிகளின் படைவரிசை பலம் பெற்ற நாளாம் மே தினத்திலும் மறுநாளிலும், நமது மாவட்ட இரண்டாவது மாநாடுகள், என்று தெரிவிக்கின்றனர், தோழர்கள்.

பந்தலமைக்கிறோம்! மாவட்ட முழுமையும் சுற்றுகிறோம்! பம்பரமென உழைக்கிறோம்! பலரையும் சந்திக்க விழைகிறோம்! — என்று செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. தங்களது மாநாட்டினை, மாற்றாரும் உற்றாரும் வியக்கும்படி நடத்திடும் ஆவல், அவர்களின் செயலிலும் மூச்சிலும் தென்படுகிறது.

இத்தகைய அருமையான இளங்காளைகளை, இலட்சியச் சிற்பிகளை, எங்கே கண்டிருப்பார், இந்தநேரு? வந்தாராம்! வார்த்தை யொன்றை வீசினாராம்!!

இதயத்தில் சுடர்விட்டெரியும் இலட்சியத்தின்வெற்றிக்காக, பட்டிதொட்டிகளிலும், பல பட்டணங்களிலும், கொள்கைமுழக்கம்செய்து குவித்திருக்கும் சக்தியினைப்பாரீர்! —என்றுகாட்ட ஆர்வம் கொள்கின்றனர், நமதருந் தோழர்கள். இதன் சின்னங்கள்தான், மாவட்ட மாநாடுகள்!

வசந்தகாலம்—தென்றல் வீசுகிறது—காதலரிருவர் கருத்தொருமித்துக் கடிமணம் காண்கின்றனர்—களிப்பூட்டும் நிலா! வெறியூட்டும் விழிகள்!!—இந்த இன்பநேரத்திலே நமது எண்ணத்தையும் இதயத்தையும், வேறு வழிகளில் செலுத்துவோம்—வியர்வை சிந்தி ஆண்டு முழுமையும் உழைத்தலுக்கும்நாம், வேறு கேளிக்கைகளில் கவனம் செலுத்துவோம்என்றுகருதவில்லை. கர்ஜிக்கின்றனர்! காடு, மேடு, மலை மணல்வெளி, எங்கும் திரிந்து தமது மாவட்ட மக்களையெல்லாம் ஒன்று திரட்டி, உறுதி எடுத்துக் கொள்ள ஓடியாடிமுயலுகின்றனர்!!

இந்த உழைப்போர் படையின் உத்தமப்பணி, பைத்யகாரச் செயலாம்—பண்டிதர், கூறியிருக்கிறார்.

வண்ணக்கிளிகள், அடைபட்ட கூண்டுகளைவிட்டு, வெளியேற, சிறகடித்துத் துடிக்கின்றன! வல்லூறு கூறுகிறது; பைத்யக்காரச் செயல் என்று!!

வாட்டிடும் வடவர் பீடத்தின் ஏக தலைவர் பண்டிதர்போல, அதிகார அம்புகள் பலவும், கட்டளையிட்டால் தாளடி பணியும் டாடாக்கள் பலரும் கொண்ட கூட்டமல்ல, நாம்; தவிப்போர் பரம்பரை. நமக்குச் சொத்து, நம்முடைய பூமித்தாயும், கால் கையும்தான்! தாயை, சிறையிலே பூட்டி வைத்திருக்கும் தயாபார், அத்தாயைக் காணத்துடிக்கும் தனயர்களின் சுதந்திர வேட்கையைக்கேலி செய்கிறார்! பைத்யக்காரர்களாம் நாம்!!

பத்தரைமாற்றுத் தங்கங்களே!—எனக்கூறுகிறது, நாடு. பண்டிதர், பைத்யக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டுமென்கிறார்.

சீமான்களின் சிரிப்பிலும், கோமான்கள் தரும் நன்கொடையிலும், கட்சியைக் காப்பாற்றிடும் அரசபூபதிகள்—அரை ரூபாய், ஒரு ரூபாய், கட்டணம் போட்டு, அதன் மூலம் கொட்டகை கட்டி, அங்கே கூடும் மக்கள் ஆர்வத்தையும், அவர்கள் மனமுவந்து தரும் காசுகளையும் ஒன்று திரட்டி, உரிமைப்போருக்கு வலிவும் வசதியும் தேடும், உத்தமர் கூட்டத்தைப் பார்த்து, பைத்யக்காரர்கள் என்கின்றனர்!

வீழ்ந்துபோன சமுதாயத்தின் நாடி நரம்புகளை முறுக்கேற்றி நல் இரத்தம் புகுத்தி, ஆல்போல் தழைக்கிறோம் — நாம். உலரும் சருகு உரைக்கிறது, நம்மை, உன்மத்தர்களென்று. விந்தைதான்! காஷ்மீர் களத்துக்கென்று கோடிக்கணக்கில் பணம் செலவிட்டும் 'கோட்டை' விடும் அழகிலிருக்கும் டில்லி பூபதியைப் பார்த்து, உலகம், கூறுகிறது, 'பைத்யக்கார மனுஷர்', என்று. உதிரி இடங்களாம் புதுவை, காரை, கோவா, இவைகளுக்கு விடுதலை வாங்கித்தர இயலாத அவரைப் பார்த்து, அகில உலகும் கைகொட்டிச் சிரிக்கிறது! அவர் நம்மைக் கேலி செய்கிறாராம், கேலி!! லண்டன் பட்டினத்திலே கிருஷ்ண மேனன் செய்த செலவு, ரஷ்யமாஸ்கோவிலே, விஜயலட்சுமி செய்த பண விரயம், புதுத் திட்டம் புதுத் திட்டமென்று அமெரிக்கனிடம் கடன் கேட்டும் அழுது, அடிவருடிகளை—அவர்கள் தேர்தலில் தோற்றவராயிருந்தாலும்—அரசுத் தலைவர்களாக்கும் போக்கு, அணைக்கட்டுத் திட்டங்களைச் சரிவர நடத்தாமல் திண்டாடும் கோரம், இத்தனையும் கண்டு வெளிநாடுகள் உரைக்கின்றன—'பைத்யக்கார மடமாக' இருக்கிறதே என்று. அந்தப் பட்டம்சூடியவர் நம்மைப் பார்த்துக் கூறுகிறாராம், பைத்யக்காரர்களென்று!

'பட்டமா! பதவியா! இதோ, வந்துவிட்டேன்' என்று ஓடும் உத்தமர்களை வரவேற்றுபசரிக்கும் அரசியல் கண்ணியம், நம்மிடம் இல்லை! ஒருவேளை, இது, அவர் கண்ணுக்கு பைத்யக்காரச் செயலாகத் தோன்றுகிறது, போலும்!! அதிகாரிகளை மிரட்டி — நான் கட்சித்தலைவன் — நான் காரியதரிசி — என்று கூறி, சுமைக்கும், சுரண்டலுக்கும், வழிவகுக்கும் போக்கை அடையவில்லை நாம் — இது, பைத்யக்காரத்தனம் போலும்! அரசியல் லாபத்துக்காக சகோதரியை அன்னிய நாட்டுக்கனுப்பி, அங்கிருப்போருடன் அளவளாவிடும் கேளிக்கையை இன்னும்

நாம் கற்றுக்கொள்ளவில்லை! இது, அவர் கருத்துக்கு பைத்யக்காரச் செயல்போலும்!! கும்பமேளா, இந்து — முஸ்லீம் கலவரம், இது போன்ற வெறிச்செயல்களில் வீழாது மக்களைக் காப்பாற்றி வருகிறோமே—இது, அவருக்கு, பைத்யக்காரத்தனமாகத் தோன்றுகிறது போலும்! கதைகளில்தான் படித்திருக்கிறோம், கம்பிகளுக்குள் கிடப்பவன், வெளியே இருக்கும் மக்களைப் பார்த்து 'ஐயயோ! ஜெயிலில் இருக்கிறீர்களே' என்று கூறியதாக. கதையை, கண்முன் விளக்கி விவரிக்கிறார், காந்தி சீடர்! கள்ளியும் முள்ளும் படர்ந்த நாட்டை, சோலையாக்கும் நமது வீரமணிகளின் செயல், பைத்யகாரத்தனமாம் — உண்மைதான்! சேலத்து வீதிகளிலும், திருநெல்வேலிச் சீமையிலும், இராமநாதபுரத்திலும், ஏன்!—இந்தத் தரணியெங்கும், தறியாளர் தவித்தபோது, காங்கிரஸ்காரர்களைப்போல கண்மூடி மௌனியாக இல்லாமல் தலையில் மூட்டைதூக்கி தவிப்போர் கண்ணீர் துடைக்க, அலைந்தோமல்லவா! அது, பைத்தியக்காரத்தனம்தான். தஞ்சைத் தரணி புயலால் தாக்குண்டு புண்பட்ட உடல்போலக் காட்சிதந்த போது, காணிக்கை திரட்டி அளித்தோமல்லவா—அது பைத்யக்காரத்தனம்தான். ஆஷாட பூதிகளும், ஆண்டிப்பண்டாரங்களும், மடாதிபதிகளும், மாளிகைவாசிகளும், காங்கிரஸ் கூடாரத்தில் கூட ஆரம்பித்த போது—பட்டம் பெற்றும், படித்ததை மக்களுக்கு எடுத்துச்சொல்லவும், அரசியல் கண்ணியத்தை நாட்டுக்கு நாடு, வீட்டுக்கு வீடு பரப்பவும் படையொன்று கண்டோமல்லவா, இது, பைத்யக்காரத்தனம்தான். சுகவாசிகள் கொட்டமடிக்கும் அரசியலை குடிசைபுரிக்குக் கொண்டுசெல்லும், பணிக்கு நம்மை அர்ப்பணித்திருக்கிறோமல்லவா — இது, பைத்யக்காரத்தனம்தான். இந்தோ சீனத்திலும், ஆபிரிக்க மண்ணிலும், மலேயாக் காடுகளிலும் அன்னியனை விரட்ட, ஆயுதம் தாங்கிய போராட்டங்கள் நடக்கும்போது, 'அறப்போர்! அறப்போர்!' என்று கூவுகிறோமல்லவா — இது, பைத்யக்காரத்தனம்தான். எங்கேயோ இருக்கும் இந்த நேரு, 'காட்டுமிராண்டி' யென்றும், 'முட்டாள் கூட்டம்' என்றும், நம்மை ஏசிவிட்டு, இங்கிருந்து ஒய்யாரமாகப் புறப்பட்டு டில்லி வரை சேருமாறு அனுமதிக்கிறோமல்லவா?—இது, பைத்யக்காரத்தனம்தான்.

நிர்வாணபுரியில், உடை உடுத்தியோன், பைத்தியக்காரனும்! நேருவும் கூறுகிறார்—அரசியல் அநீதியும், வைதீக வெறியும், ஆதிக்கப் புயலும் தாண்டவமாடுவதை எதிர்த்து, புது ஒளி காணவும், புதுவாழ்வு மலரவும் பணிபுரியும் அறிவுக் கதிர்கள், பைத்யகாரர்களாம்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி, தமது கொள்கையின்மீது சபதம் எடுத்துக்கொண்ட தஞ்சை மாநாட்டிற்கும்—இதோ வெற்றி முழக்கத்துடன் கூட இருக்கும் சேலம் மாநாட்டுக்கும் இடையில் வந்தவர் இவ்வண்ணம் செப்புகிறார்.

இருட்டு வேளையில் குருட்டு வேலைகளில் ஈடுபடாது, கண்ணியத்தோடு அறப்போர் நடாத்தி, 5000க்கு மேற்பட்ட வீரர்களை, ஒரே நாளில் அனுப்பக்கூடிய அளவுக்கு வெற்றிபெற்ற திருக்கூட்டம் பைத்யகாரர்களாம்! நாடு, நகர், பட்டி தொட்டி எங்கும் கேட்கிறது நம் குரல் — அதன் சின்னங்களாக பொதுக்கூட்டங்களும் மாநாடுகளும் காட்சி தருகின்றன. இவ்வளவு தூரம், மக்கள் மன்றத்தின் அன்பைப் பெற்றிருக்கும் நாம் பைத்யக்காரர்களாம்! பரவாயில்லை—ஏற்றுக்கொள்வோம். இந்தப் பைத்யக்காரர்களால்தான், தமிழில் தென்றலையும் மலர் மணத்தையும் கொண்டுவர முடிந்தது. இந்தப் பைத்யகாரர்களால்தான், கலையும் வாழ்வும் களிநடனம் போடுகிறது நாட்டில். இந்தப் பைத்யக்காரர்களின் ஏடுகளைத்தான், நாடும் மக்களும் எதிர்பார்க்கிறார்கள். எனவே அவர் உரைப்பதுபோல நாம் பைத்யக்காரர்களாகவே இருப்போம் — பைத்யத்தின் கூட்டமும் அதிகமாகிக்கொண்டே வருகிறது. பைத்யத்தின் சேட்டைகள், துவங்கினால் தாங்கமுடியாது—நம்மையும் நமது வீரர்களையும், பைத்யக்காரர்கள் என்று கூறும் நேரு, நமது கூட்டம் பெருகி இருப்பதைக் காணட்டும்! ஓடட்டும், இங்கிருந்து!! இல்லையேல் — பாபம்! பெரிய மனிதர் — பைத்யங்களின் கையில் சிக்கி, படாதபாடுபட நேரும். பண்டிதர் கூறுவதுபோல, நாம் துஷ்டர்களாகவே இருப்போம்! துஷ்டர்களைக் கண்டால், தூர விலகுவது நல்லோர் பண்பு! இதனைப் பண்டிதர், 'பாலபாடத்தில்' படித்திருக்கலாம். திராவிடம் — பைத்யக்காரர்களும், துஷ்டர்களும் நிறைந்த பூமியாகிவிட்டது. புண்யவானே! புத்திமிக்க கூட்டத்தின் புதல்வரே! போம்! போம்!!

"பைத்தியக்காரா! என்னடா, வேலை?", என்றுதான்கேட்டாளாம், கெட்டிலின் மூடியைத் தள்ளிக்கொண்டு குதித்தோடும் நீராவியைக் கண்டு வியந்துகொண்டிருந்த ஜேம்ஸ்வாட்டைப்பார்த்து அவனது அன்னை. ஜேம்ஸ், பைத்தியக்காரனாகவில்லை! பார்புகழும் ரயில்வண்டியின் தந்தையானான்!! வானத்தில் பறந்து செல்லும் ஆகாயவிமானத்தைச் செய்து காட்ட ரைட் சகோதரர்கள் முயன்றபோது, கேட்டோர், ஒப்பிடவில்லை—'வேண்டாமடா! இந்த வேலை. பைத்யக்காரா' என்றுதான் செப்பினர். கிரேக்க நகரத்து வீதிகளிலே சந்திப்போரிடமெல்லாம், தன்னுடைய புதுக் கருத்துக்களை கூறிய சாக்ரடீசைக் கண்ட அரசும் மதவாதிகளும் 'பைத்யக்காரா' என்றுதான் அழைத்தனர். சாக்ரடீஸ் இதோ சரித நட்சத்திரமாக விளங்குகிறார் —பைத்யக்காரன் என்று அழைக்கப்படவில்லை. 'சுக துக்கம் இரண்டுக்குமிடையிலே மக்கள் கிடந்து உழல்கின்றனரே — இது ஏன்?' என்று கேட்டுக்கொண்டிருந்த சித்தார்த்தரைக் கண்ட சுத்தோதனரும், 'என்ன பைத்தியக்காரனாயிருக்கிறானே, என் மகன்' என்றுதான் வருந்தினாராம். சித்தார்த்தர் புத்தர் ஆனார்! கோடிக்கணக்கான மக்களின் புத்தொளியானார்!! அரேபிய மண்ணிலே ஆயிரமாயிரம் கடவுள்களை வணங்கிக்கொண்டு அறியாமைக் குழியில் வீழ்ந்துகிடந்த மக்களைத் தட்டியெழுப்ப முயன்ற முகம்மதுநபியை மதீனாவிலிருந்து மக்காவுக்கு விரட்டியோட்டிய மக்கள், அவரை 'பைத்யக்காரன்' என்றுதான் தூற்றினர். அன்பு

மதம் கண்ட இயேசுவை, யூத மக்கள், இந்தச் சொல்லைக் கூறியே அழைத்தனர். அறிவு நூலின் எந்த ஏட்டைப் புரட்டினாலும், புது ஒளி கண்ட புனிதர்களை, புல்லர்கள், பைத்தியக்காரர்களென்றே அழைத்திருக்கின்றனர். இப்போது பண்டித நேரு, நம்மை அழைக்கிறார்! விஞ்ஞானமும் விவேகமும் ஆட்சிபுரியா காலத்திலே அவர்கள் சொல்லினர்—இந்த அற்புத மனிதர், அறிவொளி வீசும் இந்தக் காலத்திலே அழைக்கிறார்!! காலந்தான் வித்யாசமே ஒழிய காட்டுமிராண்டி மனப்பான்மை, சங்கா புத்ராருக்கு இன்னும் மாறவில்லை. அதற்காக கவலைப்படுகிறோம்.

முன்போர் முறை சென்னைக்கு வந்தபோது செப்பினார், இச்சீமான், "திராவிட கழகம் என்று ஒன்றிருக்கிறதாமே! அவர்களது கூச்சலைப் பொருட்படுத்தப்போவதில்லை, நான்" என்று. இந்த முறை வந்தபோது தெரிவிக்கிறார், "இப்போது, சில சமயங்களில் அவர்கள் தலைவர்களது பேச்சைப் பத்திரிகைகளில் படித்து வருகிறேன்" என்பதாக. ஓராண்டுக்குள் இம்மாற்றம்! உலகத்திலுள்ள ஒவ்வோர் மூலையும் பண்டிதருடைய பேச்சைக் கவனிப்பதாகக் கூறுவர்—அவர் கூறுகிறார், நமது கழகத் தலைவர்களது பேச்சை, கவனித்துப் படிப்பதாக! படித்த பின்னும் கூறுகிறார், பைத்யக்காரர்கள் என்று!! பரிதாபப்படுகிறோம், சாதாரண விவேகியும் அறிந்துகொள்ளக்கூடிய நமது இலட்சியங்களை இந்தப் பெரிய மனிதர் புரிந்துகொள்ளாமல் போய்விட்டாரே! — எனும் அனுதாபத்தால். பேச்சைப்படிக்கிறாராம்! எப்படி? 'இந்து'விலும், 'இந்துஸ்தான்டைம்ஸிலுமா' நம் பேச்சைப் படிக்கமுடியுமா! ஆகாது—முடியாது. அவை, நமது பேச்சின் ஒரு எழுத்தைக் கூட ஒழுங்காகப் போடா. நமது பேச்சைப் படித்திடவேண்டுமெனின், நம்முடைய ஏடுகளைத்தான் தேடவேண்டும். செந்தமிழிலிருக்கும் நமது பேச்சை, ஆங்கிலத்துக்கு மாற்றி, அதனைப் படிக்க வேண்டிய அளவுக்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. எனினும் நம்மைப் பைத்யக்காரர்கள் என்கிறார்! அப்படி படித்தும், நம்முடைய கண்ணியத்தை—கட்டுப்பாட்டை—கடமையுணர்ச்சியை அறியவில்லை, அவர். கண்கோளாறு அல்ல; கருத்துக் கோளாறுதான் காரணம்! ஆத்திரத்தால் அறிவு ஊற்றை அணைபோட்டுக்கொள்ளும், அலகாபாத்தார் அழைக்கிறாராம், நம்மை, பைத்யகாரர்கள் என்று!! 'நான்சென்ஸ்' 'காட்டுமிராண்டி' என்ற நாகல் நடையைப் பழகினார், பண்டிதர். மன்னித்தோம்! மறப்போம்!—என்றே, சொன்னோம். படித்திருக்கலாம் பண்டிதர். இந்து மதச் சட்டத்தில் சின்னஞ் சிறு மாறுதலைக் கொண்டுவர முயன்று, முடியாது விழித்தார். அழைத்திருக்கலாம், நாம்—ஊபத்யக்கார மடத்தின் ஏக தலைவரே!—என்று. அழைக்கவில்லை! வைதீகத்திடம் சிக்கி அவதிப்படுகிறார் என்றே அனுதாபப்பட்டோம். அந்தக் கண்ணியத்தையும், அவர் படித்திருக்கக்கூடும். எனினும், இவ்வண்ணம் பேசுகிறார்! ஏசுகிறார்!!

அவரது ஏச்சிலும் பேச்சிலும் இப்படி வெறி ஏற, ஏற, நமது முழக்கமும் அதிகமாகியே வருகிறது. அதன் காட்சிதான், நாம் கண்டுவரும் வெற்றிச்சின்னம்! கழக மாநாடுகள்!!

அறுபதாண்டுப் பயிர், காங்கிரஸ். அதனால் சிறு சீர்திருத்த மாநாடு கூட, நடத்த முடியவில்லை. ஆனால், நாம் நடத்துகிறோம்! இந்த வெற்றியா, பைத்யக்காரத்தனம்? சேலத்திலே நடைபெறப்போகும் மாநாடுகளிலே முதல் மாநாடு, சமூக சீர்திருத்த மாநாடு. தலைமை வகிப்பவர், திருவண்ணாமலை முன்னாள் நகராட்சி மன்றத்தலைவர், தோழர் ப. உ. சண்முகம் துவக்கி வைப்பவர் தோழர் பி. ஆர். கோகுலகிருஷ்ணன்—மாணவப் பருவமுதல் மங்காத ஆர்வம்கொண்ட, சென்னை வக்கீல். இரண்டாம்நாள் அரசியல் மாநாடு — தலைமை வகிப்பது தோழர் இரா. இளம்வழுதி, எம். ஏ., பி எல்., — நேரு சென்று கண்டு வியந்தாரே அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அங்கிருந்துவந்த புதுஒளி—கழக வழக்குகளை நடத்திடும் சட்ட நிபுணர். மாநாடுகளைத் துவக்கி வைப்பவர் தோழர் எஸ். முத்து, மதுரை தந்த செல்வம். இத்தகைய அறிவு மணிகளைக் கண்டிருக்கும் இயக்கத்தின்பணி, பைத்தியக்காரர் செயலாம்!

'அங்கலாய்க்கிறாயே, அதிகமாக! அவரென்ன முன்னேற்றக் கழகத்தைக் குறித்தா கூறுகிறார்? திராவிட கழகம் என்றுதானே செப்பியிருக்கிறார், பேச்சில்!' என்று கூறிடக்கூடும், பண்டிதருக்காக வாதாடும், இங்குள்ள படையினர். தந்தையை இகழ்ந்தால் அதனைத் தாங்கிடும் கூட்டமல்ல நாம்! தந்தையும் தனயரும், தாயகத்தின் விடுதலைக்குத்தான் போராடி வருகின்றோம். விளக்கமும், போக்கும், வெவ்வேறாகத் தோன்றலாம்! ஆனால் அடைய விரும்பும் இடம், ஒன்றுதான் — இன்பத் திராவிடம்தான்!! இந்த இலட்சியத்தையே அவர் கேலி செய்கிறார் — பைத்யக்காரச் செயல் என்கிறார்.

கேலி! கிண்டல்! வசை புராணம்! —இதனால் துவண்டுபோன கொடியல்ல நமது இயக்கம். இதனை துரைமகன் தந்த பீடத்தில் அமர்ந்திருக்கும் ஆதிபத்ய சீமான் அறிந்தாரில்லை. அதனால், ஏசுகிறார்! பேசுகிறார்!!

இப்போதெல்லாம் நமது பேச்சுக்களைப் படிக்கிறாராமே—நமது குரல் கொட்டுகிறதுபோலும். சைபீரியக் காடுகளிலே அலைந்தவண்ணம் விடுதலை முழக்கம் எழுப்பிய லெனின் கூட்டத்தைக் கண்டபோது, ஜார் மன்னன் உள்ளத்தில் தேள்கொட்டுவதுபோலத்தான் இருந்ததாம்.

இந்த 'வலி' ஏற்பட ஆரம்பித்துவிட்டால், இலட்சியம் ஈடேறி வர ஆரம்பிக்கிறதெனப் பொருள். கண்ணீரையும் செந்நீரையும் சிந்தி கட்டிவரும் கழகக் கோட்டையைக்

நன்றி

4–4–54ல் காலஞ்சென்ற என் அண்ணார் திரு. என். சங்கரன் அவர்களின் மறைவுகுறித்தும், 19-4-54ல் நடைபெற்ற அன்னாரின் நினைவுக் கல் நாட்டல் நிகழ்ச்சி குறித்தும் அனுதாபம் தெரிவித்த நண்பர்கள், பெரியோர்கள் அனைவருக்கும் என் அன்புகலந்த நன்றியை இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

என். சாம்பசிவம் (சாம்பு)

காணும்போது, மாற்றாரின் மனவலி அதிகமாகிறது. மகிழ்வோம். வளர்வோம்.

அவர்களது இதயத்தை மென்மேலும் கொட்டிடும் அளவுக்கு, நமதுகுரல் ஒலிக்கட்டும். அதுவே நமது வெற்றிக்கு வழி.

அவ்வழியினைச் சிறப்பாகஅமைப்பதில் நமது மாவட்ட வீரர்கள், அயராது பணிபுரிந்து வருகின்றனர். அதன் எடுத்துக் காட்டாக—இதோ!—சேலம் தோழர்கள், அழைக்கிறார்கள். திராவிடத்து மண்ணிலுள்ள ஒவ்வொர் ஊரிலும், நமது இயக்கம்பற்றிய சரிதக் குறிப்புகள் உண்டு. ஏனெனில், ஒவ்வோர் ஊர் மண்ணிலும், நமது கண்ணீரோ அல்லது செந்நீரோ, சிந்தியிருக்கிறது. அந்தவகையில் சேலத்துக்கு சிறப்பானதோர், இடமுண்டு. பணக் கோட்டையிலிருந்த இயக்கத்தை குடிசைபுரிக்கு கொண்டுவந்த இடம், சேலம்! அங்குள்ள சிந்தனை ஒலிகள், அழைக்கிறார்கள்-அவர்களது அழைப்பைத் திராவிடமே!—ஏற்றுக்கொள். தீயோர் கொட்டம் அடங்கவும், ஆதிக்கக்காரரின் குரலுக்குசாவுமணி அடிக்கவும், தங்க பூமியின் சிங்கத் தோழர்காள்! வாரீர்! வாரீர்!! சங்கநாதம் எழுப்ப வாரீர்!!!

★

என்று ஒழியும்? இன்பம் மலரும்!

"நான் திருவாரூர் தி. மு. க. உறுப்பினன். தற்போது காரைக்காலுக்கு அருகில் உள்ள தருமபுரம் என்ற கிராமத்தில் வசிக்கிறேன். இங்கு நடந்துவரும் பிரெஞ்சிந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து அதில் பங்கு எடுத்தேன். நம் திராவிட நாட்டுப் பிரிவினைக்குப் பின், நம நாட்டுடன் காரைக்கால் சேரவேண்டிய பகுதியாக இருப்பதால், அதன் விடுதலைக்காக நாம் பாடுபடவேண்டிய பெரும் வேலையில் நானும் சேர்ந்து பங்கு கொள்ளலாமென எண்ணி, அந்த வழியில் பணியாற்றுகிறேன்.

இங்குள்ள நாகராஜன் என்ற காங்கிரஸ் காரியதரிசியின் தலைமையில் 15 பேர்களாக ஓர் சத்தியாக்கிரக தொண்டர் படை கிளம்பினோம் முதலில், தலைவரிடமிருந்த கொடியை போலீஸ்காரர்கள் அடித்து தொந்திரவுசெய்து பிடுங்கினார்கள். அவர்களுக்காக நாங்கள் காத்திராமல், ஊர்வலத்தைத் தொடர்ந்து இரண்டு வீதிகளைத் தாண்டினோம். பிரெஞ்சு சர்க்கார் போலீஸ்காரர்களுடன் எங்களைத் தாக்குவதுபோல மிக வேகமாக 'ஜீப்' காரைக் கொண்டுவந்து நிறுத்திற்று. அதைக் கண்டு நாங்கள் அஞ்சி விலகாமல், வரிசையாக வீதியின் குறுக்கே அமர்ந்துவிட்டோம். பிறகு, காரை நிறுத்திவிட்டு வெள்ளையனும் மற்றவர்களும் கீழே இறங்கி வந்து எங்களிடமிருந்த கொடிகளைப் பிடுங்கினார்கள். நாங்கள் கொடுக்க மறுக்கவே, அடிகள் கொடுக்கப்பட்டு கொடிகள் பிடுங்கப்பட்டன. காரில் தூக்கிப்போட்டு போலீசுக்கு அழைத்துச் செல்ல உத்தரவிட்டனர். நாங்கள் எல்லோரும் நடந்தே கோஷமிட்டுக் கொண்டுசென்றோம். பிறகு போலீசில் ஒப்படைக்கப்பட்டோம். ஒவ்வொருவரும் தனித்தனியே விசாரிக்கப்பட்டோம். அப்போது அவர்கள் வீசிய கடுமையான வார்த்தைகளைக் காது கொடுத்துக் கேட்டிட முடியாது. நாங்கள் 11-4-54 இரவு 10 மணிக்குமேல் விடுதலை செய்யப்பட்டோம். எங்களைத் தொடர்ந்து இரகசிய போலீசார் வட்டமிடுகின்றனர். எங்களுக்கு உள்ளே அடைத்துவைக்கப்பட்ட பொழுது எதுவும் வழங்கப்படவில்லை. திரு. நாகராஜன், ஜப்புகேசன், பிச்சைக்கண்ணுபிள்ளை, ஷேக்மதார்லா மரைக்காயர் ஆகிய நால்வர்களையும் தலைவர்கள் என்று கருதி அவர்களை மட்டும் சிறையில் அடைத்தனர்.

இங்கு நடைபெறும் கொடுமைகளைக் கூட்டம்போட்டும், மக்களுக்கு எடுத்துச்சொல்லக் கூடாதாம்."

*

இருக்கை குமரன் எனும் தோழர் 14—4—54 அன்று இவ்வண்ணம், காரைக்கால் தருமபுரத்திலிருந்து, கடிதம் ஒன்று தீட்டியிருக்கிறார், நமக்கு.

அதைக் கண்டு திகைப்படையும் முன், திடுக்கிடத்தக்க பல தகவல்கள், பிரெஞ்சிந்திய பூமியிலிருந்து வந்துகொண்டுள்ளன.

தடியடி! தண்டனை! சிறை!—இந்தக் கொடுமைகள் போதாதென்று, குண்டர்களின் காங்களும் வலுப்படுத்தப்பட்டிருக்கிறதாம். இதனால், வீடுகளில் வாழ்வோரும், வீதிகளில் உலவுவோரும் பயங்கர வாழ்க்கை நடத்தவேண்டியநிலையிருக்கிறதாம்!

இந்தக் கொடுமை என்று ஒழியும்!—என்று, நாம் ஏங்குகிறோம்.

★

திருமணம்

19-4-54 திங்கள் காலை 9 மணி அளவில் சேலம் செவ்வாய்ப்பேட்டை தேசாங்கபுரம் புதுதெருவில் சுப்பிரமணி — சரோசா திருமண விழா தோழர் ஏ. சித்தையன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மணமக்களை பாராட்டி தோழர்கள் கே. ஏ நடராசன், வி. சிவப்பிரகாசம் பி. ஏ., சொற்பொழிவாற்றினார்கள்.

சிந்தனைச் சோலையில்
திங்கள்தோறும்
பூத்த மலர்கள்
நிரப்பிய

பூமாலை

அரசியல் பிரச்னைகளை
வாரந்தோறும்
அலசி ஆராயும்
வார ஏடு

தம்பி

மாணவருலகும்,
மாற்றாரும், நம்மை
அறிய வழிகாட்டிடத்
தோன்றும்
ஆங்கில ஏடு

BROTHER

ஏஜண்டுகள் எழுதுக:— 'தம்பி' அச்சகம், சிதம்பரம் S. A.

"ஐம்பதாண்டுப் பயிர்"

"வெள்ளைக்காரன் காலத்தில் ஏற்பட்ட இயக்கமாச்சே! — என்று கருதி, இதனைச் சீரழிக்கச் செய்யாது, இதன் வளர்ச்சியில் கவனம் செலுத்திவரும் இந்த சர்க்காரை நான் பாராட்டுகிறேன். கூட்டுறவு இயக்கம், நல்ல தத்துவத்தையும், நன்மை பயக்கும் வழிகளையும் கொண்டதாகும். 1904ல் துவக்கப்பட்ட இது, வளர்ந்து, இன்று ஐம்பதாண்டுப் பயிராக விளங்குவது மகிழ்ச்சிக்குரியதாகும். இதன் வளர்ச்சியில், நான் சார்ந்திருந்த நீதிக்கட்சிக்கு பெரும்பங்கு உண்டு. அவர்களது ஆட்சிக் காலத்தில்தான் கூட்டுறவு இயக்கத்தின் பயனையும் சிறப்பையும், மக்கள் அறியமுடிந்தது. கூட்டு, உறவு — இந்தச் சொற்களை ஊன்றிக் கவனித்தால், அது ஏற்படுத்த விரும்பும் ஒற்றுமையும், அதன்மூலம் வழங்க விரும்பும் கூட்டு முயற்சி ஆர்வத்தையும் காணலாம்.

இந்த நல்ல இயக்கம் நமது மக்களிடத்தில் போதுமான செல்வாக்கைப் பெற்றுள்ளதா என்றால் 'இல்லை'யென்றே சொல்லுவேன். யாருடைய கைக்கு இந்த இயக்கம் செல்லவேண்டுமோ அவர்களுடைய கைக்கு அது இன்னும் சென்றபாடில்லை. எனினும், ஓரளவுக்கு, பல காரியங்களைச் சாதித்திருக்கிறது, இந்த இயக்கம்.

நிலத்தின்மீது கடன் கொடுப்பது, கைத்தறியாளர்களை ஒன்று திரட்டி கூட்டுறவு முறையில் அவர்கள் தொழிலை வளர்த்து வாழ்வளிப்பது, ஆகிய துறைகளில், இது சிறந்தபணியாற்றியிருக்கிறது. இதற்காக, நான், என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பொன்விழா கொண்டாடப்படும் நேரத்தில், இன்னின்ன கடன் வசதிகளை விஸ்தரிக்கப்போகிறோம் என்று, நிர்வாகிகள் கூறுகின்றனர். அவர்கள் கூற்றில், நல்லது செய்ய வேண்டுமெனும் ஆசை தென்பட்டாலும், அது நம்முடைய நாட்டின் ஏழ்மை நிலையையும் எடுத்துக் காட்டுவதெனக் கருதுகிறேன்.

இந்த ஏழ்மை நிலையைப் போக்கும் விஷயத்தில், கூட்டுறவு இயக்கத்துக்கு, எதிர்காலத்தில் மகத்தான கடமையிருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆங்காங்கேயிருக்கும் கூட்டுறவு சங்கங்கள், கடன் கொடுப்பது — வாங்குவது என்றளவில் இருந்திடாமல், மத்திய தர மக்களுக்கும் ஏழை மக்களுக்கும் உடனடியாக நன்மை பயக்கக் கூடிய பல திட்டங்களை ஏற்று நடத்தவேண்டும். வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை, மனதில் வைத்தே இதை நான் கூறுகிறேன்.

கூட்டுறவு இயக்கம் என்றால், அதன் தலைவராகயிருப்பதும், தனக்குக்கீழ் இந்திந்த கூட்டுறவு ஸ்தா

> ஜெயங்கொண்டம் நெசவாளர் கூட்டுறவு சங்கம், சின்ன காஞ்சி அர்பன் பாங்கி ஆகியவற்றின் 'கூட்டுறவு இயக்க பொன்விழா'க்களில் கலந்துகொண்டு, சி. என். ஏ. ஆற்றிய சொற்பொழிவின் பகுதிகள்:

பனங்கள் இருக்கிறது என்று கூறிக் கொள்ளக்கூடியதுமான ஒரு ஸ்தானம் என்று பல பணக்காரர்கள், கருதிக்கொண்டிருக்கிறார்கள். அத்தகைய பணக்காரர்கள் கையில் சிக்கும் கூட்டுறவு இயக்கங்கள் என்ன பாடுபடும் என்பதை ஆந்திரத்தார், 'அந்த மனவாள்ளே!' எனும் ஒரு திரைப்படத்தில், அண்மையில் எடுத்துக் காட்டியிருந்தனர். இந்த நிலை மாறி, கூட்டுறவு இயக்கம், தனக்காக இருப்பது, தன்னுடைய வாழ்க்கை வசதிக்காக ஏற்படுத்தப்பட்டிருப்பது என்கிற அருமையை ஒவ்வொரு ஏழை மகனும், உணரவேண்டும்.

அப்போதுதான், இந்த இயக்கத்தின் நறுமணத்தை எல்லோரும் அனுபவிக்க முடியும்.

இந்த முயற்சியில் பங்குகொள்ளுமாறு வாலிப நண்பர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்கள் எல்லாம் ஈடுபட்டு உழைத்தால், இதன் பயனை மக்கள் மன்றத்துக்கு எடுத்துச் சொல்லி, மக்களை இந்த இயக்கத்துக்குள் கொண்டுவர இயலும்.

நமது மக்களிடையில் இது போன்ற புதிய இயக்கங்களின் பெருமையை எடுத்துச் சொல்லி உணரும்படிச் செய்வதென்பது, எளிதல்ல. ஏனெனில், அவர்கள் பழமையைப்போற்றி, அதுவே போதும் என்ற மனப்பான்மையிலிருப்பவர்கள்.

வேறோரிடத்திலிருக்கும் செடியை நம்முடைய தோட்டத்தில் பயிரிடும்போது, மண் வளத்தைச் சரி செய்யவேண்டும், நாம். மண் வளமின்றேல், செடி வளராது. அதுபோல, வெளிநாட்டான் வழங்கிய இந்த இயக்கத்தை வளர்க்க நம்முடைய மண்வளத்தைப்பெருக்கிட வேண்டும் — மண் வளம், என நான் குறிப்பிடுவது மக்களின் மன வளத்தைத்தான் குறிப்பிடுகிறேன்.

இந்த மன வளம் வளரும்வகையிலும், இந்த இயக்கம் ஏழை மக்களுக்குப் பயன்படும் வகையிலும், சம்பந்தப்பட்டோர் பணி புரிய வேண்டுமெனத் தெரிவித்துக்கொள்கிறேன்—பொன்விழா பருவத்தை அடைந்திருக்கும் கூட்டுறவு இயக்கத்தை வாழ்த்துகிறேன்.

ஏ. ஒய். ஏ. மறைவு

தஞ்சைப் பிரமுகர், முத்தமிழ் வள்ளல் ஏ. ஒய். அருளானந்தசாமி அவர்கள் புதன் இரவு திடீரென்று காலமான செய்தி பெற்றோம்; திடுக்கிட்டோம். அன்னாரின் நற்பணிகள் ஏராளம். அத்தகையவரின் மறைவு தஞ்சை மக்களுக்கு ஒரு நஷ்டமாகும். அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தாருக்கு, நமது அனுதாபங்கள்.

அறிவிப்பு

"பொன்னொளி" "பவழ பஸ்பம்" என்ற இரண்டு நூல்களின் விற்பனை உரிமை கீழ்குறிப்பிடும் விலாசத்தாருக்கு அளிக்கப்பட்டு விட்டதால், மேற்படி புத்தகங்கள் தேவைப்படுவோர் பரிமளம் பதிப்பகத்தாருக்கு எழுதாமல், இனிமேல் கீழ்க்கண்ட முகவரிக்கே எழுதிப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பரிமளம் பதிப்பகத்தார்

புத்தகங்கள் கிடைக்குமிடம்:—

G. N. சாமி,
183, மவுண்ட்ரோட்,
சென்னை-2

★ கோழி கூவுகிறது! ★

அந்தச் செய்தி வந்துவிட்டது.

ஆச்சாரியாரிடமிருந்து நாம் எதிர்பார்த்த செய்தி வந்துவிட்டது.

இராமாயண ஆராய்ச்சி செய்யப் போகிறாராம்!

அறிந்ததுதான் — அவரென்ன, ஐசன்ஹோவரா, அல்லது சர்ச்சிலா, இந்த லோகத்து விஷயங்களைப்பற்றி எழுத! எண்ண!!

இகலோகத்திலிருக்கும் மக்களை 'குறுக்குவழி' யில் அந்த உலகத்துக்கு அனுப்புவதிலேயே, எப்போதும் சிரத்தைகாட்டுபவர். ஆட்சிக்காலத்தில், அதற்கு துப்பாக்கிகளை நம்பினார்! இப்போது, இராமாயணத்தை, எடுக்கிறார்!!

என்ன செய்வது? ஆண்டவனின் லீலா விநோதங்களை அறியவே இன்னும் முயன்று கொண்டிருக்கும் அவரால், ஏழை வயிற்றில் புயலடிப்பதைப் பற்றியும், மரங்களில் பிணங்கள் தொங்குவதற்கான அடிப்படைகளையும், எப்படி ஆராய்ச்சி செய்ய முடியும்? சே! அற்ப விஷயங்கள்! அதைப்பற்றி, எப்போதுதான், எண்ணினார்.

ஆச்சாரியார் ஆராய்ச்சிச்செய்தி, நமக்கு, எதிர்பார்த்த ஒன்றுதான்.

எனினும், இவ்வளவு சீக்கிரம் வருமென்று எதிர்பார்க்கவில்லைநாம்.

உடல்மெலிந்தது; மனம்நைந்தது! தள்ளாடுகிறார், நடக்க; கஷ்டப்படுகிறார், 'பைலை'க்கவனிக்க; ஆகவே அரசுபதவியைவிட்டு விலகுகிறார்— என்று ஏடுகள் கூறிய செய்திகளைப் பார்த்த நாம், இன்னும் சில மாதங்களுக்குப் படுக்கையில் கிடப்பார் போலிருக்கிறது, பரிதாபம் என்றே நினைத்தோம்.

சென்று கண்டநிருபர், தெரிவிக்கிறார்—வேதநூல்கள் ஒருபக்கம் கிடக்க, மற்றோர் பக்கம் சென்ற நூற்றாண்டின் இலக்கியங்கள்கிடக்க, அவைகளுக்கு மத்தியில் அமர்ந்திருக்கிறாராம்.

ஆச்சரியம்தான்! 'பைலை' பார்க்கவும் சக்தியற்றவருக்கு, இவ்வளவு நூல்களையும் புரட்டி — தேடி— ஆராய்ந்து — அதனை எழுதி — திருத்தி—இகத்துக்கு அளிக்கும் ஆற்றல் உண்டாகியிருப்பது!! ஆண்டவன் சிஷ்யர்களின் லீலா விநோதங்களில், இது ஒரு வகைபோலும் —நாமென்ன, கண்டோம், நாஸ்திகப் பதர்கள்,

இராமாயண ஆராய்ச்சியிலீடுபடப் போகும் செய்தியை அறிவித்ததோடு இல்லை—மற்றொன்றும், கூறியிருக்கிறார். அரசியலை விட்டு அவர் விலகிவிடவில்லையாம்.

இராமாயண ஆராய்ச்சியிலீடுபட்டுவிட்டாரே, இவர் — சாயுச்ய பதவிக்கு சாமான்யர்களைக் கொண்டேகும் பணியிலே தம்மை அர்ப்பணித்து விடுவாரோ—நேருவுக்குப் பதில் விஷ்ணுவையும், காங்கிரசுக்குப் பதில் சுவர்க்கத்தையும் எண்ண ஆரம்பித்து விடுவாரோ—என்று மக்கள், நினைத்துவிடக்கூடாதல்லவா? அதனால், அறிவித்திருக்கிறார்—முன்போல கூட்டத்தின்மூலம் அல்ல!—நிருபர் வழியாக!!

கடவுளை நாடிய முனிபுங்கவர்கள், மும்மலமும் அற்று மோனத்திலிருப்பதையே பெறும் பேறெனக் கருதுவார்களாம். ஆச்சாரியார், 'அதையும் செய்வேன்—இதையும் செய்வேன்' என்று அறிவிக்கிறார்.

அரசியல் வாழ்வில், இதுபோன்ற வசதி, யாருக்கும் கிடைத்ததில்லை.

காடாறு மாதம்! நாடாறு மாதம்! — என்பர், விக்கிரமாதித்தனுக்கு

இவரோ, சமயம் வாய்க்கும்போது அரசு ஆசனம், சந்தர்ப்பமில்லாதபோது தர்ப்பாசனம்என்று கூறுகிறார். அடிக்கடி, இந்த அதிசயத்தை' ஆச்சாரியாரிடம் மட்டும் காண்கிறோம்

சென்றமுறை டில்லியிலிருந்து வந்ததும், 'பஜகோவிந்தம்!' என்றார். சின்னாட்களில், சென்னைக் கோட்டையில் 'பைல்களை'ப் புரட்டினார்.

இப்போது, 'ராம்! ராம்!' என்கிறார். காற்றுக்கோழி, எந்தத் திசையில் திரும்பப்போகிறதோ?

*

இராமாயண ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் ஆச்சாரியார், புதுச்செய்தி ஒன்றைக் கூறியிருக்கிறார்.

அதிகபலம்பெற்றிருக்கிறதாம், காங்கிரஸ் ஆட்சி! முன்னைவிட இப்போது காங்கிரஸ் கட்சியும் அதிக பலம் பெற்றிருக்கிறதாம்!!

"முன்னைவிட"—என்ன பொருள் இச்சொல்லுக்கு? சந்திக்கப்போன நிருபர், சக்கரவர்த்தியாரின் எளிமையை வர்ணித்திருக்கிறாரே ஒழிய இந்தச் சொல்லைக் கூறும்போது, ஆச்சாரியாரது முகபாவம் எப்படியிருந்தது என்பதைத் தெரிவிக்கவில்லை.

'முன்னைவிட' அதிகரித்துள்ளதாம்! அதுவும் ஆட்சிக்கும் கட்சிக்கும்! எங்கிருந்து புகுந்தது இந்தப் பலம்? ஆயிரக்கணக்கான மக்கள் திடீரென்று காங்கிரசில் சேர்ந்துவிடவுமில்லை—ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் காமராசருக்கு 'விசுவரூபம்' ஏற்பட்டுவிடவுமில்லை. எனினும், கூறுகிறார், ஆச்சாரியார்!

'எதிர்பாராத விதத்திலும் அற்புதமான முறையிலும்; இந்தப்பலம் ஏற்பட்டிருக்கிறதாம்! 'ஐக்கியமும்' உண்டாகியிருக்கிறதாம்!!

நீண்டகாலம் காங்கிரசிலிருந்தவர், கட்சிக்கு செல்வாக்கு அதிகமாயிருப்பதைக் காண, களிப்பும் ஆனந்தமும் அவருக்கு ஏற்படுவது, சகஜம்தான். ஆனால், வார்த்தைகளை அளந்து போட்டு, அவைகளுக்குள் ஆயிரம் பொருள்களை மடித்து வைத்து வியாக்யானம் செய்யக்கூடிய அற்புத வல்லமைகொண்டவர், ஆச்சாரியார்! ஆகவே, அவர் கூறியிருக்கும் வார்த்தைகளை பெல்

லாம் கவனிக்க வேண்டியவர்களாகிறோம்.

ஆச்சாரியார், காங்கிரஸ் கட்சிக்குப்பலம் அதிகரித்துள்ளது என்பதைத் தெரிவித்ததோடு இருந்துவிடவில்லை—நம்பிக்கையும் தெரிவித்திருக்கிறார். 'புதிய மந்திரிசபைநல்லபெயர் எடுக்கும்' எனத்தான் நம்புவதாகவும் கூறியிருக்கிறார்.

நல்ல பெயர்! நம்புகிறேன்!!—கூர்ந்து கவனிக்க வேண்டிய வாசகங்கள்.

காமராஜர் கூட்டிய பத்திரிகை நிருபர்கள் கூட்ட மொன்றில் ஒரு நிருபர் கேட்டாராம், "உங்கள் ஆட்சியின் கொள்கை என்ன?" என்று. அதற்கு ஆச்சாரியாரின் சீடர் சுப்ரமணியம், "கொள்கை மாற்றத்துக்கு அவசியம் என்ன வந்து விட்டது? முன்புபோல தொடர்ந்து ஆட்சி வகிப்பது, காங்கிரஸ்தானே!" என்று கேட்டாராம். ஆச்சாரியார், ஆண்டபோதும்— இப்போதும் இருப்பது, காங்கிரஸ் ஆட்சி! தனனுடைய கொள்கைகளின்படி ஆட்சியை நடத்தும்!! இதில், 'நல்லபெயர் எடுப்பார்'—'நான் நம்புகிறேன்,' என்று ஆச்சாரியார் ஆசிர்வதிக்கக் கூடிய, காரணம் யாது?

இவ்விதம் சொல்லுவதன் மூலம் தன்னைப் பதவியிலிருந்து இறக்கி விட்டனராயினும், வந்திருக்கிறபுது ஆட்சியின் மீது, தனக்கு நல்லெண்ணமும் நம்பிக்கையும் இருப்பதாகக் காட்டிக் கொள்ளுகிறார்.

ஆச்சாரியார் இந்த நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் தெரிவிக்கும்போது, ஒரு சொல் உதிர்த்திருக்கிறார்—அதுதான், 'ஐக்கியமும் உண்டாகியிருக்கிறது,' என்பது.

பசுவும்பசுவும்தொடர்புகொண்டு வாழ்வது, ஆச்சரியத்துக்குரியதல்ல. ஓரே, இனம்! ஒன்றாக வாழும்!! ஆனால் கீரியும் பாம்பும், ஒன்றையொன்று சேர்த்துக்கட்டிக்கொண்டு ஆனந்த ஆலிங்கனம் செய்துகொள்வதென்றால், அதனை, எதிர்பார்க்கவொண்ணு செய்தி என்பர்—சாதாரணமாக. பசுவும், புலியும் சேர்ந்துகொண்டு உலவுவதைக் காணும் போது அற்புதமான காட்சியென்பர். அது போலவே, ஆச்சாரியாரும் கூறுகிறார்— 'அற்புதமான, 'எதிர்பாராத', 'ஐக்கியமும்',—உண்டாகியிருப்பதாக! 'ஐக்கியமும்,' உண்டாகியிருக்கிறதாம்! — 'உம்' எதைக்காட்டுகிறது?—உங்களுக்கே தெரியும்

*

முதல், மந்திரி சபைக் கூட்டத்திலேயே புதிய கல்வித் திட்டம் குறித்து முடிவு கட்டப்படும்என்று கூறப்பட்டது — மக்களும் எதிர்பார்த்தனர்! மந்திரிகள், கூடினர் — காமராஜரும் தலைமை வகித்தார் — கூட்டமும்முடிந்தது. விளைவு, "எவ்வித முடிவும் செய்யப்படவில்லை! பின்னர் ஆலோசிக்கப்படும்!!"

'எவ்வித முடிவும்' ஏற்படாததற்குக் காரணம், என்ன? யோசித்தால் ஆச்சாரியார் கூறிடும் 'ஐக்கியம்' தென்படும்! அன்றுமுதல் இன்றுவரை அந்தக் கல்வித் திட்டத்தை எதிர்த்து வருபவர், அன்பர் காமராஜர் — அதனைக் கொண்டுவந்து குட்டையைக் குழப்பியவர் சுப்ரமணியம். இருவரும் சேர்ந்திருக்கின்றனர் — விவாதித்தால், என்ன ஏற்படும்? பக்தவத்சலர், சுப்பிரமணியத்தை முதலமைச்சராக்க முயன்று தோற்றவர்! அவரும் காமராஜரும் அமர்ந்து விவாதிக்கும்போது, என்ன ஏற்படும்'! அதுதான், முதல் நாள் மந்திரிசபைக் கூட்டத்திலேயே, தெரிந்திருக்கிறது

ஆனால், ஆச்சாரியார், கூறுகிறார், புதிய பலம் ஏற்பட்டிருப்பதாக. 'எதிர்பாராத —அற்புதமான--ஐக்கியம்' மலர்ந்திருப்பதாக.

இவ்வண்ணம் தெரிவித்தபிறகே, 'புதிய மந்திரிசபை நற்பெயர் எடுக்கும்' எனத் தான் நம்புவதாகக் கூறியிருக்கிறார். கூர்ந்து கவனித்தால், இந்தச் சொற்கள் மூலம், கூரிய ஈட்டிகளை வீசுவது தெரியும், தேசிய நண்பர்களுக்கு!

ஆச்சாரியார், தன்னுடைய ஆட்சி அரும்பும்போது, மாணிக்கவேலரை மந்திரியாக்கினர். மருண்ட காங்கிரஸ் நண்பர்கள், ஏராளம். 'காற்றுக் கோழிகளை காங்கிரசுக்குள் புகவிடலாமா—தேர்தல் காலத்தில் காங்கிரசை எவ்வளவு திட்டினர்—அவரை அழைத்தா மந்திரிப்பதவி கொடுப்பது, என்று குமுறினர்—கொந்தளித்தனர். அவர்களெல்லாம் அன்பர் காமராசர் செய்திருக்கும் 'புதிய நியமனங்களை'க் காணும்போது, இப்போது என்ன செய்கின்றனர்! இதைக் காணும் ஆச்சாரியார் முகமும் அகமும் மலராமலாயிருக்கும்?

எதிரியை நண்பனாக்கி, கழுத்தை அறு—என்கிற சாணக்கிய வித்தையைக் கற்றவர், தன்னுடைய சகாக்கள் மந்திரிகளாக வீற்றிருப்பதைக் காணும்போது, என்ன என்னுவார்? "இவ்வளவு கொட்டம் அடித்தனரே — இப்போதென்ன வாழ்கிறதாம்—எல்லாம் என் ஆசாமிகள் தானே—என்ன மாற்றம் கண்டுவிட்டார்களாம்"—என்று, எக்களிக்காமலா இருப்பார்?

புதிய மந்திரி சபையில் 'பழையவர்களை'க் காமராசர் சேர்த்துக்கொண்டிருப்பதுபற்றி, பற்பல வியாக்யானங்கள் வெளிக்கிளம்புகின்றன.

காமராஜரின் பெருந்தன்மை —விரோதியையும் அணைத்துக் கொண்டார் — கட்சிநலனையே கவனித்தார் — கர்மவீரர் — என்றெல்லாம்.

இன்னோர் பக்கத்திலிருந்து, இப்படியும் ஒரு செய்தி:-எல்லாம் தெரியாமல் செய்யவில்லை, காமராஜர்? போகப்போக பாருங்கள்! வலையில் சிக்கிய மீன்களாகிவிடுவர், இவர்கள்! மீறினால். கரையில் விடப்படுவர்!—என்பதாக.

நிலைமைகள் இப்படியிருந்தால், எவ்வண்ணம், ஆட்சி ஒழுங்காக நடைபெறும். அதனால்தான் 'தைரியமாக'க் கூறுகிறார்—எதிர்பாராத—அற்புதமான — ஐக்கியமும்—உண்டாகியிருக்கிறது! இதனால் நல்ல முறையில் ஆட்சி நடைபெறும் என்ற நம்பிக்கையும் கொண்டிருக்கிறேன், என்பதாக!!

அரசியல் வானில் கருமேகங்கள் இல்லாமலிருப்பதையா, திருச்செங்கோட்டார், விரும்புவார்? 'இவர்கள் எதிர்ப்பதற்காக, நான் விலகுவதா!' என்று வீம்பு பேசியவராயிற்றே, முன்பு!! அவருக்கு பரிவும் பாசமும் நல்லெண்ணமும் நம்பிக்கையும், மலர்கிறதென்றால்—ராமாயணத்தில்

ராமனின் வில்லடியால் வேதனைப்பட்ட கூனி, வெளியே சொல்லாமலிருந்து கடைசியில் காரியத்தைச் சாதித்தாளே, அந்தக் கதைதானே நினைவுக்கு வரும்!

*

'புதிய பலம் ஏற்பட்டிருக்கிறதாம்' அந்தரங்க சுத்தியில்லா ஆச்சாரியார் கூறுகிறார்.

'அதேபோல, முன்பு ஆச்சாரியாரை ஏசிய தேசிய நண்பர்களும், செப்பிடத் துவங்கியிருக்கிறார்கள். அமைச்சராக, கடலூர் நண்பரை அமர்த்தியதிலிருந்து காங்கிரசின் பலத்தை அதிகப்படுத்திவிட்டாராம் காமராஜர்!

வெட்கமாயிருக்கிறது, நமக்கு—செச்சே! காங்கிரசுக்காகத் தன் வாழ்க்கையையே அர்ப்பணித்த காமராஜரின் சகாக்களா கூறுவது, இப்படி—கடலூரார் சேர்ந்துவிட்டதால், கட்சிக்குப் புதுப்பலமாம்!!

சட்டசபையில், இனிச் சங்கடமில்லாமல் உலவலாம்! — கோழிப்பெட்டி மூலம் சட்ட சபையைக் கண்ட சிலர், சரணாகதிப்படலத்துக்குத் தாசர்களாகக்கூடும்.

ஆனால், காங்கிரசுக்குப் புதுப் பலம் வந்துவிட்டதாமே! அந்தப் பலம் என்ன கடலூரார், சட்டைப் பையிலா இருந்தது இத்தனை நாளும்? இல்லை, 'மந்திரியாகிறேன்' என்று கையெழுத்திட்டாரே, அந்தப் பேனாவிற்குள், அடைபட்டுக் கிடந்ததா?

மாணிக்கவேலரை மந்திரியாக்கிய போதும், ஆச்சாரியார்குழாம், புதுப் பலம் வந்ததாகத்தான் பூரித்தது! ஆனால், வடாற்காடு மாவட்டம், காங்கிரஸ் விளையாடும் பூமியாக வில்லை—மக்கள் மன்றத்தில் பூரிப்பும் புளகாங்கிதமும் தாண்டவமாடவில்லை. காங்கிரஸ் கட்சியின் புகழ், இல்லந்தோறும் புகுந்துவிடவில்லை.

தேர்தல் காலத்தில், அன்று 'தென்றல்'பாடும்'புதியமுகத்தினர்' வெற்றிபெற்றதற்குக்காரணம், அவர்கள், காங்கிரசை அழித்து ஒழிப்பதாக எழுப்பியகர்ஜனைதான்! இன்று கர்ஜனையிட்டோர், காற்றுக் கோழியாக, அதிகாரத்தென்றல்வீசியதும் அப்பக்கம் திரும்பிவிட்டதைக்கண்டதும், 'ஆகா! அரிச்சந்திரர்களே!,' என்று மக்கள் புகழ்வர்? தேர்தல் நேரத்திலே, இவர்களோடுபோட்டியிட்ட காங்கிரஸ்காரர்கள்தான், என்ன என்னுவர்! கடலூர் காங்கிரஸ்காரர்—கடந்த தேர்தலில் எஸ். எஸ். ஆருடன் போட்டியிட்டவர்—பல துறைகளில் இவரைவிடச் சிறந்தவர்தான்! இவருடைய ஜாதிக்காரர்தான்!! எனினும், தோற்றார். ஏன்? அவர் ஒரு காங்கிரஸ்காரர் என்பதால்!

அதனை அறியாமல், இவர்கள் 'மந்திரிகளாக்கப்பட்டதால்' புதுப் பலம் வந்ததாகத் தெம்மாங்கு பாடுவதும்—இதனைப் பெற, தென் ஆற்காடு மாவட்ட காங்கிரஸ் தலைவர் வெங்கடகிருஷ்ண ரெட்டியார் இத்தனை மாதங்களாக 'தவம்' கிடந்தார் என்று செப்புவதும், கண்ணீர் சிந்தவேண்டிய நிகழ்ச்சிகள்.

மக்கள் மன்றத்தை எதிர்நோக்கிக் கிடந்த கட்சி, இன்று, ஒரு சில 'மனிதர்களுக்காக' தவம் இருந்ததென்றால், அது வெற்றியை அல்ல காட்டுகிறது—வீழ்ச்சியை. அறுபதாண்டு மரம், ஆடிடும் நாணலிடம் தலை குனிந்தது—தயவுக்காக தாளடி பணிந்தது என்றால், அதன் மூலம் 'புதுப் பலம்' கிடைக்குமென்றால், அதிலே தென்படும் அரசியல் சோகம், இலேசானதல்ல! ஆள் பஞ்சத்தையும், பதவி மோகத்தின் அளவையும் இது காட்டுமே ஒழிய, வெற்றிச் சிகரத்தில் வீர உலா வருவதாகக் கருதமுடியாது.

இத்தகைய கூட்டுறவு, இடியும் கோட்டையின் நிராதரவான நிலைமையையே, விளக்கும்

இந்த உண்மையைக் கண்டதால் தான், ஆச்சாரியார், அற்புதமான—எதிர்பாராத — ஐக்கியம் உண்டாகியிருக்கிறதென்று, கூறுகிறார்.

அவர், காங்கிரசைக் கெடுக்கவந்தவர்! — தேசிய நண்பர்கள், கூற்றுப்படி.

அவர், 'நல்ல முறையில் ஆட்சி நடக்குமென நம்புவதாக'க் கூறுகிறார்.

அதோடு, இல்லை! தான் அரசியல் வாழ்வைவிட்டு விலகவில்லை, என்பதையும் தெரிவித்திருக்கிறார்.

அங்குதானிருக்கிறது, சூட்சமம்! இதனால் தான், அரசுக்கட்டிலேற காமராஜர் சம்மதித்ததும், அனுதாபப்பட்டோம்.

இதோ, கட்சி இடிகிறது! அவருடைய நேர்மைக்கும், காங்கிரஸ் பக்திக்கும், மாசு தூவப்படுகிறது!!

களிப்பவர், வாழ்த்துகிறார்! காமராஜரின் அரசியல் பாதையில் கள்ளியும் முள்ளும் படர்கிறது! அதை எதிர்பார்த்த காற்றுக் கோழியும் கூவுகிறது, ஒரு கையில் இராமாயணத்தையும், மற்றோர் கையில் 'வஞ்சக புராணத்தை'யும் ஏந்தியபடி!!

கவனித்தே வருகிறோம்!

கடந்த பல வாரங்களாகவே கவனித்து வருகிறோம்.

காய்ச்சல், அதிகமாகிக் கொண்டேபோகிறது, 'ஜனசக்தி' ஏட்டுக்கு. ஏனோ!

வியாக்யானங்கள் விபரீதமாகிக் கொண்டிருக்கின்றன. நல்லதல்ல, இது.

விளக்கமும், வாதமும், விரிந்தால்—வேதனையே, மிஞ்சும்! அஞ்சுகிறோம்.

முள்ளிக்காட்டை முல்லைச்சோலையாக்கும் பணியிலீடுபடுவோரின் 'பேனா'க்கள், அவசரத்துக்கும் ஆத்திரத்துக்கும் ஆட்படுதல், சரியல்ல. இந் நாட்டில் நம்முடைய எண்ணங்களில் ஒரு பகுதியைத் தாங்கியிருக்கும் சகோதரக் கட்சி, சமர்ப்பாதையில் செல்லுவது, அனுதாபப்படக் கூடிய காட்சியாகும்.

எனவே, 'ஜனசக்தி'யின் எழுத்துக்களைக்கண்டு, நமக்குக் கடிதம் எழுதும் தோழர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறோம் — கவனித்தே வருகிறோம்; எனினும் பொறுத்துக் கொள்வோம்.

சேலம் நோக்கி வாரீர்!

சிந்தனை முரசொலிக்க, வாரீர்!!

1—5—54 சனி

சமூக சீர்திருத்த மாநாடு

தலைவர்: ப. உ. சண்முகம்

துவக்குபவர்:

பி. ஆர். கோபாலகிருஷ்ணன் B. A., B. L.

★

2—5—54 ஞாயிறு

அரசியல் மாநாடு

தலைவர்: இரெ. இளம்வழுதி M. A., B. L

துவக்குபவர்:

மதுரை எஸ். முத்து

பொதுச்செயலாளர் C-N-A.
இரா. நெடுஞ்செழியன்,
ஈ. வெ. கி. சம்பத்
மு கருணாநிதி
கே. ஏ. மதியழகன்
என். வி. நடராசன்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
க. அன்பழகன்
அ. பொன்னம்பலனார்

சேலம் விக்டோரியா மார்க்கட்டில் அமைத்துள்ள பரசுராமன் பந்தலில் வள்ளியப்பன் அரங்கில்

தாமரைச்செல்வன்
கி. மனோகரன்
என். எஸ் இளங்கோ
சி. பி சிற்றரசு
எம். எஸ் இராமசாமி
கோவிந்தசாமி எம். எல். ஏ.,
சத்தியவாணிமுத்து
பூங்கோதை
அருண்மொழி

சி. எஸ். ஜெயராமன், நாகூர் அனீபா, கே. ஆர். செல்லமுத்து இசை நிகழ்ச்சிகள் உண்டு.

நடிப்புப் புலவர் **கே. ஆர். ராமசாமியும் குழுவினரும்** நடிக்கும்

முதல் இரவு — **காதல் ஜோதி** ★ இரண்டாம் இரவு — **ஓர் இரவு**

கட்டணம்:— வரவேற்பாளர் ரூ 5, பிரதிநிதி ரூ. 3, ஆதரவாளர் ரூ. 2, பார்வையாளர் ரூ. 1, பெண்கள் அணா 8.

குறிப்பு: கிளைக் கழகங்களிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டவர்கள் மாத்திரம்தான் பிரதிநிதிகளாகக் கருதப்படுவார்கள்.

வரவேற்புக் குழுவினர்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram